பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 10-3-40 பிரமாதி௵ மாசி௴ 27௳	முத்து 18

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
இந்தியா பட்ஜட்		486
போகிற போக்கில்		489
உலக வர்த்தமானம்		492
உதிர்ந்த மணிகள்		493
கிராம சேவை	ராவ்சாகேப் கே. ஸுப்ரமண்யம்	494
கடம்பத்தூர் சாவடி	பந்துலு	498
மளிகைக்கடை மாணிக்கஞ் செட்டி ...	ஜி. பாலசுப்ரமண்யம்	501
நெற்றி வியர்வை	ஆர். ரங்கநாயகி	504
சிறுவர் பகுதி	பார்வதி சுப்ரமண்யம்	506

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

இந்தியா பட்ஜட்

நிதி மந்திரி ஸர் ஜெரிமி ரெய்ஸ்மேன் முதல் தடவையாக 1940-41-ம் வருஷத்து வரவு செலவுத் திட்டத்தை அஸெம்பிளியில் சமர்ப்பிப்பதற்கு முன் பலர் பலவிதமாக பயந்துக் கொண்டிருந்தார்கள். ரொம்ப ரொம்ப வருமானத்தில் துண்டு விழும் என்று எண்ணினுர்கள். பளுவான பல வரிகள் விதிக்கப்படுமோ வென்று பயத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நல்லவேளை அப்படி நடக்கவில்லை. அவ்வளவு மோசமாக காரியம் முடியவில்லை. நிதி மந்திரி சமாளித்துக் கொண்டார். காலமோ கொடுமையா யிருக்கிறது. யுத்தப் பேய் பிடித்துக்கொண்டு எல்லா தேசங்களையும் பிடித்து ஆட்டுகின்றது. இவ்வித அசந்தர்ப்பத்தில் தைர்யமாக நமது தேசத்தின் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து, எந்த முட்டுக்கட்டையையும் பொருட் படுத்தாமல், நம் தேச அரசியல் ரதத்தை ஜரூராக ஸாரத்யம் செய்யும் நிதி மந்திரி ஸர் ஜெரிமி ரெய்ஸ்மேனுக்கு நாம் "புத்திசாலி"ப் பட்டமளித்தால், அதை யார்தான் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்?

"ஆமாம், இவ்வளவு விமரிசையாக அவர் பட்ஜெட் தயார் செய்திருக்கும் போது சிலர் மாத்திரம் ஏன் அவர் பேரில் குறை கூறுகிறுர்கள்?" என்ற கேள்வி பிறக்கலாம்.

வெகு சாமர்த்தியத்துடன் பட்ஜட்டை செலவுக்குத் தகுந்தாப்போல வரவை ஒழுங்கு படுத்த பொருளாதார முறைப்படி பிரயத்தனம் செய்திருப்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும் அவர் சமர்ப்பித்த பட்ஜட்டின் மேல் குறையே கூற முடியாது என்று சொல்வதற்கில்லை.

அவசியமா?

உண்மையில் இந்தியா போன்ற ஒரு தேசம் சக்திவாய்ந்த ஓர் பொருளாதார முறையைக் கையாண்டு தன் வரவு செலவை சரிப்படுத்திக்கொள்ளத் தான் வேண்டும். அம்முறை தேசியப் பொருளாதார நிலைமையை முன்னேற்றுவதாக இருக்கவேண்டும். இந்த யுத்த காலத்திலும் வரவு, செலவுக்குக் குறைந்திருக்கும் என்று தோன்றினுல், அப்படி குறையும் வருமானத் தொகையை செலவுக்கு ஈடு செய்ய உடனே வரிகள் அவசியம் விதிக்க வேண்டுமா, என்பது ஒரு கேள்வி. அதுவும் 1940-41-ல் எதிர்பார்க்கப்படும் மிகச் சிறிய வருமானக் குறைவை ஈடுபடுத்த ரயில்வே சார்ஜுகளை ஏற்றுவது நியாயந்தானு? ரயில்வே சார்ஜை ஏற்றுவது நேரடியாகவில்லாமல் போனுலும், ஒரு வரி விதிப்பது போல் தானே? அப்படியும் இல்லை. வருமானக் குறைவை எப்படியாவது ஈடுசெயய வேண்டுமென்றே வைத்துக்கொள்வோம். அதனுல் சர்க்கரைத் தொழில் நடத்துகிறவர்களையும், சர்க்கரை உபயோகிக்கிறவர்களையும் இந்த வரி பளுவைத் தாங்கச் சொல்வது உசிதமா? அதனுல்தான் நிதி மந்திரி பட்ஜட்டை விமரிசையாகத் தயார் செய்திருந்தபோதிலும் இது போன்ற குறைகள் இருக்கின்றன என்று குறை கூறவேண்டி இருக்கிறது.

அழகான கணக்கு!

இப்பொழுது அஸெம்பிளியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜட்டுக்குப் போவதற்குமுன், அதற்கு முந்தின வருஷங்களின் பட்ஜட்டைச் சற்று கவனிப்போம். 1938-39 பட்ஜட்டின் முடிவு

அதிசயிக்கத் தகுந்ததாக இருந்தது. சூரகம் தன் குழந்தை காகம் தான் என்று எண்ணிக்கொண்டிருக்க, குஞ்சு குயிலாக மாறுவதுபோல் அவ்வருஷத்தில் ரூ. 265 லக்ஷம் வருமானத்தில் குறையும் என்று கணக்குப் போட்டு வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது சீர்திருத்திய கணக்கில்பார்த்தால் ரூ. 64 லக்ஷம்தான் வருமானத்தில் துண்டுவிழுந்திருக்கிறது என்று லக்ஷமாக அதிகரித்தது. இப்பொழுது நிகழும் வருஷத்து வரவு செலவு கணக்கிலிருந்து, வருமானம் எதிர்பார்த்ததை விட ரூ 508 லக்ஷம் அதிகமும், செலவில் ரூ 420 லக்ஷம் குறைவும் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இதனால் அந்தந்த வருஷத்தில், அதற்கடுத்த வருஷத்து வரவு செலவுகளை நிர்ணயிப்பது, உத்தேச்யமாகத் தான் என்பதும், அப்

பட்ஜட்

1939-40 (சீர்திருத்திய கணக்குப்படி)

மொத்த வருமானம்	ரூ.	87,76 லக்ஷம்
மொத்த செலவு	ரூ.	86,85 ,,
மீதி	ரூ.	91 ,,

1940-41 (தற்கால நிலைமைப்படிக்கு)

மொத்த வருமானம்	ரூ.	85,43 லக்ஷம்
மொத்த செலவு	ரூ.	92,59 ,,
வருமானக் குறைவு	ரூ.	7,16 ,,

சர்க்கரை, பெட்ரோல் முதலியவற்றின் கட்டணத்தை அதிகரித்ததனால் கிடைக்கக்கூடிய அதிக வருவானத்தையும், அமித லாப வரியால் கிடைக்கக்கூடிய வருமானத்தையும் சேர்த்தால்,

மொத்த வருமானம்	ரூ.	92,64 லக்ஷம்
மொத்த செலவு	ரூ.	92,59 ,,
மீதி	ரூ.	5 ,,

தெரிகிறது. அவ்வருஷத்தின் வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் ரூ. 181 லக்ஷம் அதிகமாக குட்டிபோட்டுக்கொண்டுவிட்டது. செலவோ எதிர்பார்த்ததை விட ரூ. 50 லக்ஷம் குறைந்தது. அதுபோலவே நிகழும் வருஷத்தியபட்ஜட்டில் ஒரு வருஷத்துக்கு முன் எதிர்பார்க்கப்பட்ட மீதி வருமானம் ரூ.3 லக்ஷம். இந்த யுத்த காலத்திலும், இவ்வருஷ மீதி வருமானம் ரூ. 3 லக்ஷமாக இல்லாமல் ரூ. 91 படி நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் வருமானம் சிறிது அதிகமாகவும் செலவு கொஞ்சம் குறைச்சலாகவும் அமையுகின்றன என்று விளங்குகிறது.

1940-41 பட்ஜட்

அடுத்த வருஷத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் ரூ. 85,43 லக்ஷம்.

பாதுகாப்புச் செலவு இந்த வருஷத்தில் ரூ. 53,53 லக்ஷம். இதில் இவ்வருஷம் அதிகமாக்கப்பட்ட ஸிவில் செலவுகள் 151 லக்ஷம் அடங்கி இருக்கின்றன். ஸிவில் செலவு அதிகமானதற்கு ஒரு காரணம் இன்னும் ஏழு வருஷங்களுக்கு வருஷத்துக்கு ரூ. 25 லக்ஷம் வீதம், இந்தியர்கள் விமானப் பயிற்சி யளிப்பதற்காக கிராண்ட் செய்திருப்பது. எனவே ஸிவில் செலவுகள் ரூ. 39,07 லக்ஷம், ராணுவச் செலவு ரூ. 53,53 லக்ஷமுமாக சேர்ந்து மொத்தச் செலவு ரூ. 92,59 லக்ஷம். செலவுக்கு ஈடு செய்வதற்கு வருமானத்தில் ரூ. 7,16 லக்ஷம் அதிகம் வேண்டும். இதற்கு நிதி மந்திரி சில தீர்மானங்கள் செய்திருக்கிறார். நிகழும் வருஷத்தில் மிகுதியா யிருக்கும் ரூ. 91 லக்ஷம் 1940-41 வருமானத்தில் சேர்த்துவிடுவார். அமித லாப வரி மூலம் ரூ. 30 லக்ஷம் சமாளித்துவிடுவார். மிகுதியை சர்க்கரையின் பேரில் கட்டணத்தை அதிகப்படுத்தி, மோட்டார் எண்ணெயின் பேரில் விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தை அதிகப்படுத்தி, வருமானத்தைப் பெருக்கி 1940-41 முடிவில் ரூ. 5 லக்ஷம் மிச்சத்தைக் காண்பிப்பார். ஏனெனில், யுத்த காலத்தில் வரவு செலவுகளைச் சரிப்படுத்தி ஏற்றத் தாழ்வில்லாமல் ஈடு செய்யவேண்டும் என்கிற ஆர்வம் அவருக்குப் பூர்ணமாக இருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருக்கும்போது அவர் வரி விதிக்காமல் இருப்பாரா?

நோக்கம்

நியாயம் தான், பட்ஜட் தயாரிக்கும் போது வரவு; செலவுக்குக் குறையும் பக்ஷத்தில், செலவுக்கு ஈடு செய்ய வேண்டிய முறையைக் கையாளுவதில் ஒன்றும் குற்றமில்லை. ஆனால் வரவு செலவு புள்ளிகளை ஒன்றுக்கொன்று ஈடு செய்து பட்ஜட்டைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது ஒன்று மாத்திரம் இருந்தாலும் போதாது. பட்ஜட் தயார் செய்யும்போது செலவு செய்வதின் நோக்கத்தைத் தெளிவாக வைத்துக்கொண்டு அதற்கேற்றாப்போல தயார் செய்யப்பட்ட பட்ஜட்தான் தேச ஜனங்கள் ஒப்புக்கொள்ளக் கூடியது. செலவு செய்வது ஒரு தேசத்தின் பாதுகாப்புக்காகவா அல்லது தொழில் அபிவிருத்திக்காகவா என்பதை முதலில் பட்ஜட் தயார் செய்கிறவர் தெரிந்து கொண்டு பிறகு தயாரித்தால், அப்படித் தயாரிக்கப்பட்டது தேசத்துக்கு நன்மையைக் கொடுக்கும். அதுவல்லாமல் தேசத்தின் கொஞ்சம்நஞ்சம் இருக்கும் தொழில் ஸ்தாபனங்களையும், ஏழை ஜனங்களையும் நசிக்கக்கூடிய வரிகள் விதிப்பதைக் காட்டிலும் அவ் வரிகளிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையை, ஒரு தேசத்தின் பலனளிக்காத கடன் தொகையில் (Unproductive Debt) சேர்ப்பதே நலம்.

BOOKS FOR ALL

	Rs.	A.
1. The Message of the Gita Edited by Anilbaran Roy.	5	0
2. Songs from the Soul By Anilbaran Roy	1	4
Works of Sri Aurobindo		
3. Essays on the Gita 1st Series	6	0
4. 2nd Series	7	8
5. Kalidasa		
6. A System of National Education	1	0
7. The Ideal of the Karmayogin	1	8
8. The Renaissance in India	1	4
9. The Life Divine (Just published Vol. I)	6	0

Svetaranya Ashrama,

7, North Mada Street, Mylapore.

போகிற போக்கில்



நான் பிறந்த ஊர் காவேரிப்பூம் பட்டிணம்—பட்டிணத்துப் பிள்ளை பிறந்து வளர்ந்த ஊர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காவேரிப்பூம் பட்டிணம் உண்மையில் ஓர் பெரிய பட்டிணமாய் வாழ்ந்து வந்தது. சரித்திரத்திலும், காவியத்திலும் புகார் என்று பெயர் வழங்கியது. சோழ நாட்டிற்கு ராஜதானியாகவும் விளங்கியது. ரோமாபுரியைப் பார்த்து அதற்கு ஈடாகவும், அழியாப் புகழ் உள்ளதாகவும், புகாரைச் செய்யவேண்டுமென்று கரிக்கால சோழன் காதல் கொண்ட நகரமே இது. ஆயிரம் கப்பலோடிய பெரும் துறைமுகமாயுமிருந்தது.

அரசன் ஊட்டிய பெயரை காவியம் நிலை நிறுத்தியது. சிலப்பதிகாரம், மணிமேகலை, காவேரிப்பூம் பட்டிணத்திற்கு அழியாப் பெயரை இட்டன.

அந்த நாளில் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன் நமது நாகரீகமும் கல்வி ஆக்ஷியும் உலகெங்கும் உலவவில்லையா? ஆப்ரிக்கா முதற்கொண்டு, மெக்ஸிகோ வரையில் நமது நாகரீகமும் வாழ்க்கை நயமும் பரவவில்லையா?

* * *

புகாருக்கு வடக்கு எல்லை திருவெண்காடு (சுவேதாரண்யம்); தெற்கு எல்லை திருக்கடையூர். மேற்கு எல்லை எல்லையம்மன் கோயில். அந்தநாளில் நகரத்தின் எல்லையைக் காட்ட சர்க்கார் முத்திரையிட்ட முழு நீள-எல்லைக் கற்கள் ஊன்றுகிறதில்லை. பிளானில் கோடு கிழிப்பதில்லை. ஆனால் ஒரு கோவிலைக் கட்டி அழியாத எல்லையாக்குவது வழக்கம்.

கரிக்கால சோழன் நாளில் காவேரிப்பூம் பட்டிணத்தின் விஸ்திர்ணம் பத்து மைல் சதுரம். தெற்கு வடக்கில் 10 மைல். கிழக்கு மேற்கில் 10 மைல். இப்பொழுது சமுத்திரத்தில் ஒரு மைல் மூழ்கியிருக்கிறது. சங்கமுகேசுவரர் தன் சங்கமுகத்தில் அலையோரம் நின்ற தன் கோவிலை இழந்து இப்பொழுது கிராமக் கோயிலில், நகர வாசிபோல், ஒண்டிக் குடியிருக்கிறார்.

புரொபஸர் பாட்ரிகெட்டிஸ் என்பவர், தற்கால நகர அமைப்புத் திட்டம் போடுவதுபோல், இரண்டாயிரம் வருஷத்திற்குமுன் மன்னர் கரிக்கால சோழர் நாளிலேயே காவேரிப்பூம் பட்டிணத்தை ஓர் தொழில் முறைமையில் பிரிக்கப்பட்ட ஊராக (functional city) அமைத்திருந்தார்கள்.

* * *

கரிக்கால சோழன் நாளில் கொள்ளிடம் பிறக்கவில்லை. காவேரி நதியே சமுத்திரம்போல் புரண்டு அகண்ட காவேரியாக ஓடி திருவெண் காட்டிற்கு அருகில் சங்கமுகமாய்க் கொண்டு வந்திருந்தது. இப்பொழுது மாயவரத்தில் பட்டமங்களத் தெரு மகாதானத் தெருவாக வழங்கி வருவது, அந்த நாளில் காவேரிப் படுகையாக இருந்தது—மேட்டூர் ஏரியால் கொள்ளிடத்திற்கும் இனிமேல் இந்த கதிதான் நேரப் போகிறது.

* * *

ஓர் விசித்திரம். நதிகள் உலகில் பள்ளத்தில் ஓடுவது இயல்பு. ஆனால் காவேரியின் புண்ணிய பிறப்பு அது மேட்டிலேயே கற்பழியாமல் குடகு முதற்

கொண்டு சங்கமுகம் வரையில் ஓடிவந்து கடலை அடைகிறது. ஆகையால்தான் காவேரியின் நீர் வீண் போவதில்லை. ஆதலால், வெள்ள காலத்தில் அடிக்கடி உடைப்பிற்கும் காரணமாய் ஏற்படுகிறது.

இப்பொழுதே அப்படி என்றால், இரண்டாயிரம் வருஷத்திற்குமுன் கேட்க வேண்டுமா? காவேரி ஒரு பெரிய காட்டாறு. ஏராளமான வெள்ளப் பாழ் மழை காலத்தில் ஏற்பட்டு வந்தது. இதை கரிக்கால சோழன் சகிக்கவில்லை. அவர் நாளில் இந்த அகண்ட காவேரிக்கு, சைனு தேசத்து நதிகள்போல், கரைகளும் கிடையாது. அதிக வெள்ளத்தைக் கொள்ள, கொள்ளிடமும் கிடையாது. கேட்க வேண்டுமா?

ரோமாபுரிபோல் அழியாத நகரமாய் புகாரை எப்படி செய்வதென்று சிந்திக்கும் கரிக்காலச் சோழனுக்கு இரவும், பகலும் தூக்கமில்லை.

* * *

இலங்கைக்குப் படையெடுத்துசென்று கரிக்கால சோழன் ஓர் பெரிய வெற்றியை அடைந்தார். லக்ஷக்கணக்கான கைதிகளை சோழ தேசத்திற்கு கப்பலேற்றிக்கொண்டு வந்தார். மகா பராக்கிரமசாலி.

இவ்வளவு கைதிகளை என்ன வேலையில் பூட்டலாமென்று சிந்தித்தார்? அகண்ட காவேரிக்கு உயர்ந்த கரையைப் போட்டு காட்டாறை அடக்கி புகாரையும் அழியாத நகரமாய் நக்ஷத்திர மண்டலம்போல பிரகாசிக்கச் செய்யலாமென்று எண்ணிக் களித்தார். தன் வாழ்நாளிலேயே தென்னை மரம் உயரம் காவேரிக்கு கரைபோட்டு முடித்தார். காவேரிப் பூம்பட்டினம் முதல் ஸ்ரீரங்கம் வரையில் இருபக்கமும் கரைபோட்டுக் காட்டாரைக் கட்டினர்.

* * *

ஆனல் ஈசன் செயல் வேருக முடிந்தது. கரிக்கால சோழன் இறந்த நூறு வருஷத்திற்குள் ஓர் பெரும் வெள்ளம் பெருகி கரைக்குள் அகப்பட்ட காவேரி தத்தளித்து வெள்ளம் பின் புரண்டு ஸ்ரீரங்கத்திற்குச் சமீபத்தில எலமனூரில் மண் மூட்டைக் கரைத்து, உடைத்து, காவேரி; கொள்ளிட ரூபமாய் மாறிவிட்டது. காவேரிப் படுகைக்கு கொள்ளிடப்படுகை இன்றைய தினம் கூட 6 அடி பள்ளம். கேட்க வேண்டுமா? காவேரியில் ஜலம் வற்றிப் போய்விட்டது. காவேரிப்பூம்பட்டினத்தில் மண்மாரி பொழிந்தது. திருவெண்காட்டில் வசித்த பார்ப்பனர்கள் காவேரியம்மன் தங்களை விட்டு விலகி 15 மைல் வடக்கேகடல்போல் புரண்டோடுவதைப் பார்த்துவிட்டு, அங்கேயே போய் குடியேறி கொள்ளிடத்திற்கு வடகரையில் சிதம்பரத்தை நிர்மாணம் செய்தார்கள். திருவெண்காட்டிற்கு ஆதி சிதம்பரம் என்ற பெயரையும் அளித்தார்கள். அந்தப் பெயர் இன்றையதினம் கூட வழங்குகிறது.

* * *

இப்பேற்பட்ட புராதன புகழ்பெற்ற ஊரில் பிறந்தவன் நான், என்ற ஞாபகம் சிறு பிராயம் முதற்கொண்டு என்னை எப்பொழுதும் துலவிக்கொண்டே இருக்கிறது. வாழ்வில் பல தோல்விகள் அடைந்தும் நான் இந்தப் பெருமையை மறக்கவில்லை. பழைய கல்விச் சிறப்பைப் போற்றி மறுபடியும் எப்பொழுது கரிக்காலன் ஆண்ட பட்டணத்தில் ஓர் சர்வ கலாசாலை நவீன முறைமையில் நிர்மாணம் செய்யப்போகிறோம் என்ற சொப்பனஸ் வதையை அடிக்கடி படுவதுண்டு.

ஆகையால் இந்த சமயத்தில் நான் அடைந்த கிளர்ச்சியைப் பற்றிக் கேட்க வேண்டுமா? காலமோ, புண்ணிய காலம். தை அமாவாசை. சமயமோ, என்னுடைய குரு ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமி காமகோடி பீடாதிபதி, ஆசார்யாள் ஊருக்கு வருகிருர். நானே இப்பொழுதுதான் காசி யாத்திரை முடித்து கங்கையைக் கொண்டு வந்திருக்கிறேன். கயா சிராத்தம் செய்து பித்ருக்களை கரையேற்றி விட்டு வந்திருக்

கிறேன்; என் தாயின் மனோரதத்தைப் பூர்த்தி செய்திருக்கிறேன்.

* * *

நாளை தினம் அமாவாசை. இன்றைய தினம் மாலையில் நானும் என் உத்தம நண்பர், டாக்டர் டி. எஸ். ரமணியும் செம்பனார் கோயில் ரயிலடியில் உலாவிக் கொண்டு 5-30 மணி ஷட்டிலில் ஒரு நண்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். —ராவ் சாகேப் கே. சுப்பிரமணியம்.

பதினைந்து வருஷம் முந்தி "முருகன் ஓர் உழவன்" என்ற நாவலில் நான் கண்ட கனவை இவர் செயல் ரூபமாக முப்பது வருஷம் விடாத் தொண்டு செய்து, அஸில் நகர் ஸெட்டில்மெண்டில் பூர்த்தி செய்தவர். இவரைக் கண்ட தினம் முதல் நமது தேசத்திற்கு ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் சுயராஜ்யம் உண்டென்ற நம்பிக்கையை யடைந்தேன்.

* * *

இரண்டு வண்டியை தள்ளாடப்பிள்ளாட இழுத்துக்கொண்டு 'விஸில்' அடித்துக்கொண்டு, பழைய மாப்பிள்ளை வேட்டகத்திற்கு வருவதுபோல், ஷட்டில் செம்பனார் கோயிலுக்கு வந்து சேர்ந்தது. ராவ் சாகேப் கே. சுப்பிரமணியம் வண்டியைவிட்டு இறங்கும்முன் நமது சிரோமணி சாஸ்திரிகள் மடிசஞ்சியும் கையுமாக குதித்து இறங்கி, "மணி ஐயர்வாள், ராவ்சாகேபை ரொம்பநாளாக எனக்குத் தெரியும். உங்களை சந்தித்தது போல் தற்செயலாய் மாயவரம் ஜங்ஷனில் ரிப்ரெஷ்மென்ட் ரூமில் அவரையும் சந்தித்தேன்" என்று நயமான குரலில் சொன்னார்.

"சந்தோஷம் சாஸ்திரிகள், பொடி மட்டை அகப்பட்டதா" என்று கேட்கலாமென்று நினைத்தேன். ஆனால் சாஸ்திரிகளைப் பார்த்ததும் நான் ஒரு கவலையடைந்தேன். அவருக்கு என் வண்டியில் இடமில்லையே. வேறு நல்ல வண்டி இந்த ஊரில் கிடைக்காதே—மன்னன் கரிக்கால சோழன் வாழ்ந்த ஊரில்!

ராவ்சாகேப் கேட்டார்: "மணி அய்யர் சார், காவேரி பட்டணம் மைல் ஒன்பதுதானே. புண்ணிய காலம். நாம் எல்லோரும் நடந்து போவோம். வண்டியில் பொட்டியையும் படுக்கையையும்போட்டு விட்டு, பொட்டிக்கு காவலாய்—வழியில் கூட்டம் ஜாஸ்தி—சாஸ்திரிகள் வேண்டுமானால் வண்டியில் வரட்டும்." போலீஸ் தீர்மானத்துடன் ஸெட்டில்மெண்டில் ஆர்டர் போடுவது போல் ராவ் சாகிப் போட்டார்.

கொஞ்சம் பாசாங்கு செய்துவிட்டு மேற்கத்தி மாடு பூட்டிய வில் வண்டியில் சிரோமணி சாஸ்திரிகள் ஏறி உட்கார்ந்தார். நானும் ராவ்சாகேபும், கரிக்கால சோழனுடைய புகாரைப் பற்றியும், ஆசார்யாளுடைய அருளைப் பற்றியும், தை அமாவாசை புண்ணிய காலத்தைப் பற்றியும் பாமர ஜனங்களின் நம்பிக்கையைப்பற்றியும் கலகலவென்று பேசிக் கொண்டே, அழகு வாய்ந்த பழைய ஆலமர மடர்ந்த மண் சாலையில்—ஜில்லா போர்டு மெம்பர் இந்தப் பிரதேசத்திலில்லை—உல்லாசமாய் கடற்காற்று வாங்கிக்கொண்டு மனக்கோட்டை கட்டிக் கொண்டு ஆயாசமன்னியில் சென்றோம்.

மணி

படித்தவர்கள் பாமரர்கள்
கிழவர்கள் இளைஞர்கள்
ஆண்கள் பெண்கள்
எல்லோரும்
படித்து ஆனந்திக்கத்தகுந்தது

*

பாரத மணி

இனிய வாரப் பத்திரிகை

வருஷ சந்தா { உள் நாடு ரூ. 4 / வெளி நாடு ரூ. 6 }

*

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

உலக வர்த்தமானம்

கோரமான யுத்தம் நடக்கும் ஐரோப்பியக் காட்டில் ஸமர்வல்ஸ்போய் அகப்பட்டுக் கொண்டார். பெர்லினுக்குச் சென்று ஹிட்லருடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தாராம். சமரஸத்தைப் பற்றி கூட பேச்சு நடந்ததாம். ஜெர்மனி சர்வாதிகாரி சமரஸத்துக்கு தான் ஒத்துக்கொள்ளுவதாக இருந்தால் அவர் இது வரையில் அபகரித்த நாடுகளைப்பற்றி ஒன்றும் பேசவேகூடாதாம்; அவர் சொல்லுகிறபடி நேச நாடுகளும், பிரிட்டிஷ், பிரஞ்சுக் காரர்களும் கேட்பதாக இருந்தால் அமெரிக்காதூதர் மூலம் சமரஸத்துக்கு இடம் உண்டு, என்று ஹிட்லர் சொல்வதாகத் தெரிகிறது.

பின்லாந்துக்கு மறுபடியும் ஒருவெற்றி. அவர்கள் வரையில் பாக்யசக்கரம் சுழலுகிறது என்று நன்ருக புலப்படுகிறது. சென்ற வாரத்தில் வியபுரி காலியாய்விட்டது. இந்தவாரத்தில் காரலியன் ஜலசந்தி அருகில் ரஷ்யப்படையை விரட்டி அடித்தார்கள், என்று செய்தி கூறுகிறது.

யுத்தகாலத்து செலவை யுத்தேசித்து சிலகாட்களுக்கு முன்னமே பிரிட்டிஷ் சர்க்கார் வரிகள் விதித்தார்கள். அப்பொழுது ஒரு கடன் தொகை செலவுக்கு வாங்கவேண்டும் என்று நிச்சயம் செய்தார்கள். இப்பொழுது அதுபோன்ற தேசியக்கடன் தொகை ஒன்று எழுப்ப தகுந்த சமயம் என்று கூறி பிரிட்டிஷ் சான்ஸலர் ஸர் ஜான்ஸைமன் 300 மில்லியன் பொன் கடன் தொகை வசூல்செய்யப் போவதாக காமன்ஸில் தெரிவித்தார்.

இந்தியா 1940-41-க்கு பட்ஜட் தயாராகிவிட்டது. பாதுகாப்புக்கு சாட் பீல்ட் கமிட்டி உத்தரவுப்படி இப்பொழுது செலவு அதிகமாகி இருக்கிறது. அதனுல் வருமானம் போதாததால் ரெயில்வே சார்ஜுகளை அதிகப்படுத்தவும், அமித லாபவரி விதிக்கவும், சர்க்கரை பெட்ரோல் சரக்குகளின்பேரில் உள்ள கட்டணத்தை அதிகப்படுத்தவும், தீர்மானித்திருக்கிருர்கள். இந்தவழிகளில் கிடைக்கும் வருமானம் செலவுக்கும் ஈடுசெய்யப்பட்டு 1941-ம் வருஷத்து கடைசியில் ரூ. 5 லக்ஷம் மிச்சம் ஆகிவிடும் என்று நிதி மந்திரி எதிர்பார்க்கிருர். மத்திய அஸெம்பிளியில் தீவிர விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

பாட்னுவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி தேசமுன்னேற்றப் பாதையில் இன்னும் ஒரு அடிமுன் சென்றிருக்கிறது. காங்கிரஸின் சமரஸத் தீர்மானங்களைக் காதுகொண்டு கேட்காமல் பிடிவாதமாக இருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரைக் கண்டித்தது. காந்திஜியே தேசத்தை, தலைமை வகித்து முன்னேற்றவேண்டும் என்று தீர்மானித்து சர்வ வியவகாரங்களையும் காந்திஜி கையில் விட்டுவிட்டது. சட்ட மறுப்புதான் கடைசிப் போராட்டம் என்றுலும் காந்திஜி தேசம் அதற்குத் தயாராக இல்லா திருக்கிறவரையில் அதைத் தொடங்க மாட்டார் என்று தெரிகிறது. இதனிடையில் இன்னும் அரிய சீர்த்திருத்தங்களைச் செய்ய காங்கிரஸ்காரர்கள் முன்வரவேண்டும் என்று காந்திஜி கூறுகிருர். ராம்கார் காங்கிரஸுக்கு சில தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு காரியக்கமிட்டி கலைந்தது.

சென்னை சர்க்கார் 1940-41-ம் வருஷத்து வரவு செலவுத்திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. அதன்படி இப்பொழுது மது விலக்கு அமுலுக்கு வந்திருக்கும் ஜில்லாக்கள் தவிர மற்றவைகளில் மது விலக்கு அமுலுக்குக் கொண்டுவரப் போவதில்லை. விற்பனை வரி விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில புதிய சீர்திருத்தங்களைச் செய்ய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது என்று அறிக்கை கூறுகிறது.

உதிர்ந்த மணிகள்

பிரிட்டிஷார்கள், இந்தியர்களுக்கு வேண்டிய அரசியல்திட்டத்தை தாங்களே ஏற்படுத்தவேண்டும் என்று நிச்சயம் செய்திருப்பது இந்தியர் முன்னேற்றத்திற்கு இடையூறானது. இந்தியர்களே தயார்செய்வதைக் காட்டிலும் பன்மடங்கு நியாயமாகவும் கெட்டிக்காரத் தனமாகவும் பிரிட்டிஷார்கள் அதைத் தயார் செய்தாலும் அதை இந்தியர்கள் நல்லதாகக் கருதமாட்டார்கள்.

வேர்னன் பார்லேட்

* * *

ஜாதி வித்தியாசத்தைக் காட்டுவதில் ஆரியர், திராவிடர் என்கிற பதங்களுக்கு அர்த்தமே இல்லை. தேசத்தில் பலபாகங்களில் வசிக்கும் ஜனங்களின் வெளித் தோற்றத்தைக் கொண்டுகூட இந்த ஜாதி வித்தியாஸத்தை ரூபிக்க முடியவில்லை; பல ஜாதியார்கள் நம் தேசத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள், இந்த தேசத்திலேயே பழமையாக இருந்தவர்களுடன் கலந்து கொண்டுவிட்டார்கள்.

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி

* * *

வரப்போகும் அரிய சந்தர்ப்பங்களில் தங்கள் தொண்டை தேசத்துக்குப் புரிய தயாராவதற்கு இப்பொழுதே நம் தேச யுவர்கள் கிராமத்துக்கு யாத்திரை போவதுபோல் சென்றுவரவேண்டும்.

ஸர். மிர்ஸா இஸ்மெயில்

* * *

காங்கிரஸ் காரியக்கமிட்டி, காங்கிரஸின் திட்டங்களை,ஸந்தேகாஸ்பதமாகமறைத்து வைத்திருந்தது என்று விரோதிகளும் சொல்லமுடியாது; சிநேகிதர்களும் சொல்ல முடியாது.—இருவர்களும் காங்கிரஸுக்குள்ளேயும் வெளியிலேயும் இருக்கிறார்கள்.

"நேஷனல் ஹெரால்ட்"

நான் பிரஸிடென்ஸி காலேஜில் மாணவனாக இருந்தபோது என்னுடன் படித்த ஆந்திரர்கள் என்னைத் தமிழன் என்று நினைத்து என்னை விட்டுவிட்டார்கள். அது போலவே தமிழர்களும் என்னை ஆந்திரராகக்கருதி என்னை ஒன்றிலும் சேர்த்துக் கொள்வதில்லை. இதனால் படிப்புக்கு செலுத்த எனக்கு வேண்டிய அவகாசம் கிடைத்தது.

ஸர். ஸி. வி. ராமன்.

* * *

இந்தியர்கள் மிகவும் குறைந்த வாழ்க்கையை நடத்தினால்கூட அதிகமாக உணவுப்பதார்த்தங்களுக்கும், துணிகளுக்கும் இரும்புச் சாமான்களுக்கும் தேவை உண்டாகும்.

டாக்டர் பி. ஜே. தாமஸ்.

* * *

மாணவனை மார்க்கு எவ்வளவு வாங்கினானென்பதிலிருந்து நான் மதிப்பிடமாட்டேன். ஆனால் அவனுடைய தேகஸ்திதியிலிருந்தும் தோற்றத்திலிருந்தும் தான் கண்டு கொள்ளுவேன். மனிதர்களின் தேக அமைப்பை அழகுபடுத்தி, பலக்கச் செய்யும் வேலைகளில் எத்தனைபேர்கள் போகிறார்கள் என்பதிலிருந்துதான் ஒரு பள்ளிக் கூடத்தை நான் மதிப்பிடுவேன்.

ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்

* * *

ஒவ்வொருவரும் பொருள்களை உபயோகிக்கிறவராக மாத்திரம் இருந்தால் போதாது. பொருள்களை உற்பத்தி செய்கிறவராகவும் இருக்கவேண்டும். தேசத்தின் செல்வத்தை விருத்தி செய்யக் கூடியவராக இருக்கவேண்டும்.

ஜவஹர்லால் நேரு

திண்ணையில்

[ராவ் சாகேப் கே. ஸுப்ரமண்யம், தஞ்சாவூர்]

கோண கணபதித் தாத்தா சிஷ்யர்களுக்கு ஸோயாபீன்ஸ் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஆனல் ஜப்பான் வேலைதான் என்ன என்று கேட்பாயோ. அந்த ஜப்பான்லே இந்த ஸோயாபீன்ஸ் விளைவு உண்டு. நம்ம தேசத்திலே மொச்சைக் கொட்டை, அவரை மாதிரி வரவர அந்த விளைவு ஜாஸ்தி ஆக ஆக விலைவாசி குறைஞ்சிருக்கும். என்ன செய்கிறது என்று பார்த்தான்கள். இந்த பீன்ஸ் கொட்டைக்காரன்கள் ஒன்று சேர்ந்து கொண்டு, இந்தியாவில்தான் இருக்கே திறந்து கிடக்கிற முட்டாள்கள் வீடுகள். அங்கே தள்ளிக் காசு பண்ணலாம் என்று தீர்மானித்தார்கள். பெரிய பெரிய நோட்டீஸ்கள் அடிச்சான்கள். சமைக்கிறவிதம், வறுக்கிற தினுசு, இன்னும் பக்குவம் செய்ய முறைகள், டாக்டர் ஸர்ட்டிபிகேட்டுகள் எல்லாம் வந்ததுகள் இந்தியாவுக்கு. அதோடே அநேகம் பொம்மைகள் படங்கள். 'ஊசியா யிருக்கிறவன் உரலாயிடுவான். தட்டையாயிருப்பவன் புட்பால்மாதிரி உருண்டையாவான். வழுக்கைத் தலையனுக்கு அஸாத்திய அழகுள்ள கேசங்கள் முளைக்கும், கிழவன் குமரனுவான் குட்டையன் நெட்டையனுவன்' என்றெல்லாம் விளம்பரங்கள். இந்த, ஸோயா பீன்ஸின் அபார சக்தியால்தான் ஜப்பான் ரஷியாவையும் ஒரு அடி அடித்தது. சீனுவையும் பிடித்தது இதன் பலத்தினுல் தான். மொத்தத்திற்கு ஜப்பானின் முன்னேற்றத்திற்கு இந்த ஸோயா பீன்ஸ் தான் அந்த மீந்துகிடந்ததெல்லாம் விற்பனையாச்சுது நம்ம மொச்சக்கொட்டை மல்லாக்கொட்டைக்கும் அப்படி ஒரு அசட்டு தேசம் கிடைத்தால் நாமும் அந்த ஜப்பானை காப்பி அடிக்கலாம். பாரசீகத்தின் பேரீச்சம் பழத்தையும் இந்த மாதிரி வேலை பண்ணலாம். அதன் கொட்டையும் விலையாயிடும். இந்தமாதிரி ஏதாவது யோகம் நம்ம புளியங்கொட்டைக்கு அடிக்கப்படாதா? புளியம் பழம் உலுக்குகிறுர்களே! "ஊகித்துப் பார்த்தால் எல்லாம் வேடிக்கையாயிருக்கிறது. எப்படியோ? இந்தக் காசு சம்பாதிக்கிற வழியை வெளிதேசத்துக்காரன் நன்ருகக் கண்டு பிடிச்சு அசடுகளாயிருக்கிற நம்மிடத்தில் ஏமாத்தி பிடுங்கிக்கொள்கிறுன்கள். நம்ம ஜனங்களும் நம்பி மோசம் போகிறுர்கள். எப்போது இவர்களுக்கு நல்ல புத்தி வருமோ தெரியாது."

"போகட்டும், இந்த சுகாதார ஆக்டு நல்லது தானே. நீங்கள் இவ்வளவு வியாக்கூலம் செய்வானேன்? வீடுகளுக்கு பெரிய பெரிய ஜன்னல்கள் காற்ரேட்டத்துக்கு இருக்க வேண்டாமா? இல்லாமலிருந்தால் கெடுதல் இல்லையா? அசுத்தமாயிருப்பதைக் கண்டிக்க வேண்டாமா? ஆகாரவகைகள் சுத்தமாயிருக்க வேண்டாமா? இதெல்லாவற்றையும் கவனிக்கத்தானே அந்த சட்டங்களும் அதிகாரிகளும் ஏற்பட்டிருக்கின்றன." என்று சுகாதாரச் சட்டத்துக்கு பேச்சைத் திருப்பினுர்கள் சிஷ்யர்கள்.

"ஆக்டுகள் சட்டங்கள் எல்லாம் நல்லதுதான். அதனுலேயே நல்ல பலன்

ஏற்படும் என்பது என்னமோ எனக்கு சந்தேகம். எத்தனையோ சட்டங்கள் ஆக்டு கள் இருக்கு; இந்த ஆக்டுகளெல்லாம் என்ன செய்துவிடும்? பயப்படுகிறவன் களுக்குத்தான் இதுகள். பயப்படாத வன்களுக்கு லட்சியமேயில்லே. நான் தஞ்சாவூர் ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கி னேன். சுமார் இரண்டு மைலிருக்கிற கரித்திட்டான்குடிக்குப் போகவேண்டும். வழி நெடுக எலெக்ட்ரிக் கம்பங்களில் எனுமல் போர்டுகள் 'அசுத்தம் செய் யாதே. அசுத்தமே வியாதிக்குக் கார ணம்' என்று தமிழில் எழுதி இருந்தது. எனக்கும் சட்டம் பயம் உண்டு. ஆனால் எனக்கு ஒன்றுக்கு போக வழிநெடுக ஒரு இடம்கூட அகப் படவில்லே. ரொம்ப கஷ்டப்பட்டேன். ஆனால் சிலபேர் ரோட்டு பக்கத்திலேயே மரங்களுக்கு மறைவிலேயே கஷ்டத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். ஆக்டு என்ன பண்ணும், அங்கங்கே கக்கூஸுகளோ, யூரி னல்களோ கட்டியிருந்தால் ரோட்டு பக்கம் அசுத்தங்கள் ஏற்படுமா? ஜனங்களுக்கு ஸ்வயபுத்தியில்லேயா அவைகளை உபயோ கிக்க? ஆகையாலே ஆக்டு மாத்திரம் பிர யோசன மில்லே. அவைகளை அமுலுக்குக் கொண்டுவர கிரியைகள், உத்தியோகஸ் தர்கள் வேண்டும். அவர்களுக்குச் சம்ப ளம் ஆபீஸ் சிலவுகள் அந்தச்சிலவுகள் நம் தலையில்தான் விழும். அதிகப்படியாய் செலவில்லாமல் ஆக்டு இருந்தால் இருந்துதொலையட்டும். எத்தனையோ ஆக் டோடே இது ஒன்று. ஆகாரம் வகை யராத்தான் சொன்னேனே. இன்னும் ஜாஸ்தியாகப்போனல் ஆகாரப்பதார்த்தங் கள் இன்ஸ்பெக்டர், அல்லது அதற்கும் மேலதிகாரிகள் கீழ் அதிகாரிகள் கால கிர மத்தில் ஏற்படலாம். முதலில் ஒருவர் இரு வர் இருப்பார்கள். கொஞ்ச காலத்திற் கப்புறம் ஜாஸ்திவேலை யிருக்கும். அதற் குத் தகுந்தாற்போல சிப்பந்திகள் ஏற் படுவார்கள். சட்டப்படியே போய்க் கொண்டிருக்கும். அவாள் செலவுகளுக்கு நாம்தான் குடுக்க வேண்டும். இந்த மாதிரி தான் ஆக்டுகளும் அதனதன் நடவடிக்கை களும். சில பேருக்கு வேலை அகப்படும். பிழைத்துப் போகட்டும் இந்த கஷ்ட காலத்திலே!"

"நீங்கள் உங்கள் அபிப்பிராயத்தைத் தான் சொல்லுங்கோளேன். இதெல்லாம் உங்களுக்கு திருப்திபடவில்லே போலே யிருக்கிறது......"

"நான்தான் முன்னமேயே சொன் னேனே. நம் தேசத்திலேயே ஒருவித அபூர்வ சக்தி யிருக்கிறது. அதை விருத்தி செய்தால் அதிக சுகமாகவே நாம் ஜீவிக்க லாம். அந்த விருத்தி எப்படி செய்து கொள்ள வேண்டும் என்று ஆலோசித்து நடந்துகொள்ளவேணும். பிரபஞ்சத்திலே கெட்டதும் நல்லதும் கலந்தே கிடக் கின்றன. எதற்கு சக்தி அதிகமோ அது தான் மிஞ்சுகிறது. உலகத்திலே யிருக் கும் ஜீவராசிகளில் நாம் ஒன்று. ஒவ் வொரு ஜீவராசியும் தனக்குத்தானே இந்த உலகில் பிரவர்த்திக்க வேண்டும் என்ற எண்ணத் தோடேயே நடந்துகொண்டு, ஒன்றையொன்று எதிர்த்து அழிக்க முயன்று கொண்டே இருக்கிறது. அந்தமாதிரி ராசிகளில் இந்த விஷக்கிருமி களும் ஒன்று. அவைகள் மனிதர்களையும் எதிர்க்கிறதுகள். அதற்குமாறாக நம் மிடத்திலும் சக்தியிருந்தால் அதனால் தப்பித்துக் கொள்ளுகிறோம். இல்லையேல் மாண்டுபோகிறோம். அம்மை பிளேக், கால்றா முதலான கொடிய வியாதிகளுக் கும் விஷக் கிருமிகள்தான் காரணம் என்று எல்லார்க்கும் தெரியும். இவைகளை எதிர்த்து நிற்கும் சக்தி நமக்கு இருக்கி றதா? இருக்கு. ஆனால், வரவரக் குறைகி றது. அதினால்தான் அதிக சாவுகள். ஏன் குறைகிறது? சரியான, போதுமான ஆகாரமில்லாததினால்! அதற்கு என்ன செய்யலாம்? சர்க்கார் வரியைக் குறைக்க வேண்டும் கூடியவரையில். (2) செல்வம் நம்மிடத்தில் தங்கும்படியான தொழில் களை ஏற்படுத்தி விருத்திசெய்யவேண்டும். (3) அப்படி செல்வம் தங்கினால், தோட்டங் கள் வயல்களை விருத்திசெய்து ஆகாரப் பொருள்களைப் பெருக்கலாம். (4) விளை பொருள்களைக் கொண்டு தொழில் மூலமாயும், விஞ்ஞான ஆராய்ச்சி

மூலமாயும் வேறு வேறு வேண்டிய ஸாமான்கள் செய்து கொள்ளலாம். (5) சுரங்கங்கள் வெட்டி உலோக வேலைகள் செய்யலாம். இந்தமாதிரி செல்வம் மிகுதி ஆனால் அன்னம் அதிகமாகும். சக்தி பெருகும். மனோபலம், புஜ பலம், ஆயுதபலம், தனபலம் எல்லாம் உண்டாகும். எந்த வியாதியினாலும் அதிக ஆயுள் நஷ்டம் ஏற்படாது. நம் முடைய சரீரமாகிய கோட்டைக்கு நாம் நல்ல பந்தோபஸ்து செய்துக் குடுக்க வேண்டும். அதற்குள்ளிருக்கும் சக்திகள் விரோதியான வியாதிகளை வெளியே தடுக்கும். உள் புகுந்தாலும் நாசம் செய் யும். இந்த அபாரமான சக்திகள் இந்த கோட்டைக்குள் எப்படி இருக்கின்றன. என்பது ஒரு பெரிய விஷயம். அதை ஒரு நாள் சொல்லுகிறேன். எல்லாவற் றிற்கும் முடிவில் சரியான ஆகாரத்தில் தான் ஆதாரம். அதில்லாமல் வேறு அநேகம் செய்தாலும், ஏதோ கொஞ்சம் சாந்தியே தவிர பூரண பலம் கொடுக் காது. அந்த ஆகாரம் சம்பாதிக்க வழி காண்பிக்காமல் ஆக்டு போட்டு பயப் படுத்தினால் போதுமா? இந்த பயத்தால் ஏதோ மிகக் கொஞ்சம் பிரயோஜனம் உண்டானாலும், ஆக்டினால் அதிகாரிகளி டம் திண்டாட்டப்படுகிறது ரொம்ப ஜாஸ்தியாகலாம். ஆக்டு வந்து விட்டது. அனுபவித்துத்தான் தீரவேணும். வேறு வழியில்லை. முன்னேற்றம் என்னமோ சந் தேகம்தான். எல்லாம் வாய் பேச்சுதான். அதோடே சரி."

"அநேகம்பேர் லெக்சர் செய்கிறார்களே கிராம சேவையைப்பற்றி, நீங்கள் கவ னிக்கவில்லையா? தேனீ வளர்த்தல். குடி சைத் தொழில் செய்தல், நெல், கைக்குத் தல், பசு, எருமை வளர்த்தல், நூல் நூற் றல், என்று என்னவெல்லாமோ சொல்லிக் கொண் டிருக்கிறார்களே."

"ஆகா, அழகுதான். தேனீ வளர்த்தல் விஷயம். காடுகள், தோட்டங்கள் நிறைய இருக்கிற இடங்களில் முடியலாம். அநேக கிராமாந்திரங்களில் மரங்கள் ரொம்ப கொஞ்சம். நிறைய தேன்கூடுகள் வைத்துவிட்டால் தேன் நிறையக் கிடைக் குமா? அந்த தேனீக்களை வளர்ப்பதே மிகக் கஷ்டம். அநேகம் பேர்கள் கூட்டின் விலைகூட எடுக்க முடியாமல் திண்டாடு கிறார்கள். புஷ்பவனங்கள தோட்டங்கள் முதலியன நிறைய வேண்டும். தேனீக் கள் அவைகள் எப்போதும் புஷ்பத் துடனிருக்கவேண்டும். விடா மழையின் போதும் புஷ்பங்கள் இருக்காது. இருந் தாலும் தேன் இருக்காது. அப்போது தேனீக்கள் ஓடிப்போய்விடும். அதோடு மெழுக்குப்புழு, பூச்சி என்கிறது தேன் கூட்டில் சேர்ந்தால் நாசம். இவ்வளவுக்கும் தப்பி தேன் கிடைத்தால் விலையும் அதிக மில்லை. எங்கே சொல்லு பார்ப்போம்? தேன்கூடு எத்தனை பேர் வைத்தார்கள்? எத்தனை கூடுகள்? எத்தனை லாபகரமா யிருக்கின்றன? எத்தனை நஷ்டமாய்விட்டு விடப்பட்டன? வேணுமானால் பரீக்ஷை நீங்களும் பாருங்களேன். உங்கள் அதிர்ஷ் டம் லாபமாயிருக்கலாம். நன்றாக விசாரித் துக்கொண்டு ஆரம்பியுங்கள். இரண்டா வது, குடிசைத் தொழில் செய்தல் என் கிறார்கள். என்ன என்ன தொழில்கள் என்று யாராவது சொல்லுகிறார்களா? இல்லை. ஒரு பிராந்தியத்தில் கிடைக் கிற மூல பொருள்கள் இன்னொரு இடத்தில் கிடையாது. அந்தந்த ஊரிலோ பிராந்தியத்திலோ கிடைக்கும் வஸ்துக்களைக்கொண்டு எந்தெந்த மாதிரி என்னென்ன தொழில் செய்கிறது? ஏதேது விற்பனை ஆகும்? ஏதாவது நமக்குத் தெரிகிறதா? அந்த லெக்சர் காராளாவது சொல்கிறார்களா விவரமாய்? யாரோ ஒருவன் ஒரு மூலையில் ஒரு வார்த்தை சொன்னால், அதை மற்ற பிர சங்கிகளும் கிராம்போன் மாதிரி பாடிவிடு கிறார்கள். நம்ப ஊரிலேயும், சுற்றுப் பக் கத்திலேயும்—வாழை—தென்னை நிலக் கடலை ஜாஸ்தியாக இருக்கின்றன. 'இவை களிலிருந்து ஏதாவது செய்யலாமா? செய்தால் வெளி நாட்டு சாமான்கள் முன் இவைகள் நிற்குமா?' என்றெல்லாம் பரீக்ஷை செய்து காண்பித்தால் தாராள மாக நாமும் நம்ம ஸ்வல்ப மூலதனத்தைப் போட்டு ஆரம்பிக்கலாம். அது இல்லாமல்

சும்மா கதை சொல்லுகிறவர்கள் பேச்சைக் கேட்டு இறங்கினால் கிழவன் கழுதை, வித்த, கதிதான் நமக்கும். ஏதாவது பரிசோதனை செய்து பார்க்கலாம் என்றாலோ அதற்கு நம்மிடத்தில் காசு கிடையாது. ஊரெல்லாம் ஒன்று சேர்ந்து கொஞ்சம் கொஞ்சம் பணம் போட்டுப் பார்க்கலாம் என்றாலோ நம்மிடத்தில் ஒற்றுமையில்லை. தவிரவும் கூன் விழுந்த முதுகும், கட்டு மார்பும், குழிந்த கண்ணும், மூக்குக் கண்ணாடியும், சோகை பிடித்த உடம்பும் இங்கிலீஷ் ட்வீட் (Tweed Coats) கோட்டுடன் உயர்தர நம்ம படித்த பையன்கள் இந்தத் தொழில் பயிற்சிக்கு லாயக்கில்லை. அவன் கதி சத்தில்லாத (Bleached) அரிசி சோறு. காய் கறியில்லாமல் அப்பளாம், பருப்பு இல்லாத முளகுத் தண்ணீர், வெண்ணெய் எடுத்துவிட்ட நீர் மோர் காப்பித் தண்ணி இவைகளோடு அவன் போராடிக்கொண்டிருக்கிறான். பாவம் இந்தத் தொழில்களில் அவனுக்கு ஞானமுமில்லை, இச்சையுமில்லை. நமக்கும் வழி தெரியவில்லை. காட்டிக் கொடுப்பவர்களுமில்லை. சும்மா பேசி பலன் என்ன? விட்டுத் தொலை. நெல் குத்தல், அனேகமாக நம்ம கிராமங்களில் நாமேதான் குத்திக்கொள்கிறோம். பட்டண வாஸிகளுக்குத்தான் இந்த உபதேசம் வேண்டும். அதுவும் வீட்டு எஜமானிகள் இருக்கிறார்களே அவர்களை சரிப்படுத்தவேண்டும். நூல் நூற்றல்: பஞ்சு நம்மிடத்தில் விளைகிறதில்லை. வேறு தேசத்திலிருந்து தருவித்து நூல் செய்தால்—நடுவேயுள்ள செலவுகள் அஸாத்தியமாய் விடுகின்றன லாபமில்லை. பசு வளர்த்தல்: மேச்சல் தரைகளைக் காண்பியுங்கள், அப்பா, நல்ல பில்லோடே நிறைய பசு எருமை எல்லாம் வாங்கி வளர்ப்போம். இதெல்லாம்என்ன கதை? கேட்டுக்கேட்டு ஆய்விட்டது. நான்தான் முன்னமேயே சொன்னேனே. கூட்டுறவு சங்கம் சேர்ந்து கொஞ்சம் நிறைய முதல் போட்டு தொழில் ஆரம்பிக்கவேண்டும். தனித் தனியாக தொழில்கள் நடத்த முடியாது என்று சொன்னது ஞாபகம் இல்லையா?"

"நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஆனால் ஊர் ஒன்று சேருகிறதுதான் முடியாத காரியமாயிருக்கு. என்ன செய்யலாம்?"

"தூங்கப் போ. ஆகிறபடி ஆகிறது. ஆனால் ஒன்று மாத்திரம் நன்றாக மனதில் வை. என்ன தெரியுமா? 'காசு சம்பாதிக்கவேண்டும். கூடுமானால் நியாய மார்க்கத்தில்.' என்று ஒரு அமெரிக்கா தகப்பன் தன் பிள்ளைக்குக் கடிதம் எழுதினானாம் அதுபோல.

> 'My dear son, you must earn *dollar* & *dollars* possible by honest means. Anyhow you must earn them !'

(தொடரும்)

கடம்பத்தூர் சாவடி

[பந்துலு, தியாகராயநகர்]

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அவர்கள் இருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. ஆனால் அவர்கள் யார் என்பதை மட்டும் அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. பாவம், அவன் மனம் பதை பதைத்தது. பீச்சு ரோட்டுக்கு அருகில் உட்கார்ந்திருந்த அவன் சடக்கென்று எழுந்து தண்ணீருக்கு அருகில் போனான். போனவன் அலைகளுக்கு எதிரில் போய் உட்கார்ந்தான். அவர்கள் இருவரும் ஒரு மண் மேடைக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தனர். ராமுவின் கண்களுக்கு அவர்கள் புலன்படவில்லை, ஆனால் ராமுவிவின் மனம் மாத்திரம் ஏதோ வேதனை செய்துகொண்டிருந்தது. 'நமக்கும் அப்படி ஒருத்தி இருந்தால்?' என்னும் கேள்வி அவன் மனதில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

வீட்டில் அவன் தாயாரும் தமையனும் அன்று காலையில் சொன்ன வார்த்தைகள், அடிக்கடி அவன் காதுகளில் வந்து மோதி அவன் எண்ணத்தைக் கலைத்தன.

"குட்டிச் சுவராட்டம் வயசு ஆச்சே, இதுவரையும்தான் என்னமோ குழந்தை படிச்சிண்டிருக்கானேன்னு சோறு போட்டு வளர்த்தது, இனிமேல் கூடவா போடணும். அவன் மாத்திரம் என்ன? உன்னைக் காட்டிலும் மூணு வயசுதானே பெரியவன். அவன் சம்பாதிச்சு உனக்குப் போடவேணுமென்னு என்ன? வீட்டை விட்டு எங்கேயாவது ஒழிந்து போ. சம்பாதிக்காமல் இவ்வீட்டில் அடிகூட வைக்காதே" என்று தன்னைப் பெற்ற சொந்தத் தாயாரே சொன்னால் அவன் மனம் நோகாமல் இருக்குமா?

ராமு எங்கேயாவது போய் தற்கொலை செய்துகொள்வது என்ற தீர்மானத்துடனேயே காலையில் வீட்டைவிட்டுக் கிளம்பினான். ஆனால் அவனுக்குத் தற்கொலை செய்து கொள்ளுவதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. எத்தனை விதமாக யோசனை செய்தாலும் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. கையில் இருந்த நாலு அணாவைக் கொடுத்து மத்தியானம் ஓட்டலில் சாப்பிட்டான். பிறகு ஊரைச் சுற்றி பொழுதைப் போக்கடித்துவிட்டுச் சாயங்காலம் பீச்சுக்கு வந்தான். அங்கே இராத்திரி பொழுதை எப்படிக் கழிப்பது, என்பதைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அப்போதுதான் மேல் சொன்ன காட்சி அவன் கண்களில் பட்டது.

'ஸூட்' போட்டுக்கொண்டு ஒரு வாலிபனும், அவன் பக்கத்தில் ஒரு பெண்ணும், ராமு உட்கார்ந்திருந்த பக்கமாகச் சென்றனர்.

அவர்களைக் கண்டதும் ராமு எண்ணிக் கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் மாறி அவ்விருவர்களின் மேல் சென்றது. அவர்களைச் சற்றுநேரம் கூர்ந்து கவனித்தான். அவர்களைத் தொடர்ந்து செல்லலாமா என்பது ஒரு பக்கம். யாராவது பார்த்துவிட்டால் என்ன சொல்லுவார்களோ என்னும் பயம் மற்றொரு பக்கம். மனது மாத்திரம் பதைபதைத்துக் கொண்டுதானிருந்தது. எழுந்தான். ஜலத்திற்குக் கிட்டே போய் உட்கார்ந்தான். பிறகு அவ்விருவரையும் அவனால் பார்க்க முடியவில்லை.

தானும் அம்மாதிரி உல்லாசமாக இருக்கும்காலம் எப்பொழுதோ, என்று எண்ணி எண்ணி இரவு எட்டு மணிவரையில் கடற்கரையிலேயே மனப்பால் குடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இரவு மணி எட்டு. கோட்டையில் மணி அடிக்கும் சப்தம் அவன் காதில் வந்து விழுந்தது. இதுவரையும் அவன் மறந்திருந்த பழய எண்ணங்கள் மறுபடியும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து

அவன் மனதை வதைக்க ஆரம்பித்தன. இரவு எங்கே செல்வது? என்பதைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. கடைசியில், "சரி, இனி எங்கே போகிறது? வீட்டுக்குத்தான் போக வேண்டும். வைதாலும் அடித்தாலும் தாயாரும் உடன் பிறந்தவனும்தானே" என்று தீர்மானம் செய்துகொண்டு நேரே புறப்பட்டு வீடுவந்து சேர்ந்தான்.

2

"வந்துட்டயோ இல்லையோ? எங்கேயோ தொலைந்தேன்னு நினைச்சுண்டிருந்தேன். மறுபடியும் வந்து விட்டாயோ இல்லையோ தண்ட பிண்டம் வடிச்சுக் கொட்டுகிறேன், சாப்பிட்டுவிட்டு நிம்மதியா படுத்துண்டு தூங்கு" என்று ராமுவைக் கண்டதும் வைய ஆரம்பித்துவிட்டாள் அவன் தாயார் மீனாக்ஷியம்மாள்.

"சாக்கடை ஜலத்துக்கு போக்கெடம் எங்கேம்மா? கார்த்தாலே அவன் கோபிச்சிண்டு போனதைப் பார்த்தால் அத்தோடு இந்த வீட்டைக் கூட திரும்பிப் பார்க்க மாட்டா னென்றன்னு நினைச்சேன்! ஹூம்! எங்கே போய் விடுகிறது? இவனுக்கும் எனக்கும் யார் உத்தியோகத்தை வச்சிண்டு காத்திண்டிருக்கா? இவனைப் பார்த்தாலே, இவன் தான் சுத்தசோம்பேறிப் பையலன்னு மூஞ்சியலேயே எழுதி ஒட்டி வச்சிருக்கே. ஏதோ நான் இருக்கேன் பிச்சை எடுத்தாவது சம்பாதித்து போட்டுவிடுகிறேன். தின்னு விட்டு சுகமாய் இருக்கான். அவனுக்கென்னம்மா? மகராஜன்!" என்று ஒரு குத்தலான பிரசங்கத்தைச் செய்து முடித்தார் ராமுவின் அண்ணன் வெங்கடராமய்யர்.

"மகராஜன் மூஞ்சியைப் பாரு எப்படி இருக்குன்னு. இவனுக்கு தண்டசோறு சோடுவது போதாதுன்னு இவனுக்கொரு கலியாணத்தைப் பண்ணிவெச்சு அவளுக்கும்கொட்டணமாம். கேட்டயா கதையை? அவாத்து கோபு கிட்டே அன்னிக்கு சொல்லிண்டு அழுதானும். இப்போ அவனுக்கு புத்தி யெல்லாம் கலியாணம் பண்ணிக்கறத்து மேலே இருக்கு. கஷ்டமோ நஷ்டமோ பட்டு பி. ஏ. வரையில் படிப்பு சொல்லித் கொடுத்தயோ இல்லையோ; கலியாணத்தையும் பண்ணி வைத்துவிட்டு இவனுக்கு பேடாது போருமென்னு அவளுக்கும் சாப்பாடு போட்டுண்டு இரு."

"அம்மா! இந்த ஆத்துலே இனிமேல் இவனுக்கு ஒரு வேளை கூட என்னால் சாப்பாடு கீப்பாடு போட முடியாது. வேலை அகப்படலேன்னு அப்பா என்னமோ ஊர்லே பத்துகாணி நிலம் சம்பாதிச்சு வச்சிருக்கார். பேசாமே ஊருக்குப் போய் இரண்டு கடா மாட்டை வாங்கி உழுதுண்டிருக்கிறது தானே. என்னமோ தம்பீன்னு நல்லத்தை நினைச்சு படிப்பு சொல்லிக் கொடுத்தேன். இவன் எங்கேயாவது போய் வேலை சம்பாதிக்காமல் என் குடலை அறுத்து அதற்குப் பணம் கொடு, இதற்குப் பணம் கொடு என்று கேட்டால், என்ன என்னிடம் பணம் கொட்டியா வச்சிருக்கு?" என்று பேசி முடித்தார் வெங்கடராமய்யர்.

ராமு இவ்வளவு பேச்சுகளையும் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகராமல் கேட்டுக்கொண்டே யிருந்தான். கடைசியில் தன் அண்ணன் பேசிய பேச்சுகளில் ஒரு சில அவன் முகத்தில் சந்தோஷத்தை உண்டாக்கின. அவனிடத்தில், தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் ஜெயித்து விட்டவன்போல் ஒரு தெம்பு காணப்பட்டது. ஆனால் அங்காரசமான பேச்சுக்கள் மாத்திரம் அவன் மார்பைப் பிளந்து கொண்டே யிருந்தன.

"என்னதான் வேலை இல்லாமல் ஒருவன் இருந்தாலுங்கூட வாயில் வந்தபடி எல்லாம் பேசிவிடுவது நியாயமா? நாளைக்கே நல்லகாலம் பிறந்தால் சம்பாதிக்காமலா போகப் போகிறேன்? வேலைக்கு எங்கேபோய் முயற்சி செய்தாலும் அகப்படவில்லை, நாம் என்ன செய்வது? எல்லாம் கடவுள் சித்தம்........ ஹூம்! அதுதான் சரி; நல்ல யோசனை அப்படித்தான் செய்துவிடுவது," என்று தீர்க்கமாக எதையோ யோசித்து மனதில் தீர்மானம் செய்துகொண்டான் ராமு.

3

ராமு தன்னுடைய அண்ணனையும் தாயாரையும் விட்டு பிரிந்துச்சென்று வருஷங்கள் ஐந்து ஆயின. அவன் வாழ்க்கை உன்னத நிலையை அடைந்தது. உத்தியோகமில்லாத திண்டாட்டத்தை ஒழித்து, சுகமாக வாழும் புதிய வாழ்க்கை ஒன்றை அவன் கண்டுபிடித்தான்.

கடம்பத்தூர் ராமுவை தெரியாதவர்கள் கிடையாது. சட்டசபை அங்கத்தினராய்விட்டாண. உழைத்து ஜனசமூகத்திற்காக வேலை செய்யும் அங்கத்தினரில் அவனும் ஒருவன்.

கடம்பத்தூர் பாலாற்றங் கரையில் உள்ள கிராமம். ராமுவின் பிதுரார்ஜிதமான ஊர். அவன் ஐந்து வருஷங்களுக்கு முன் தன்னுடைய அண்ணன் கோபித்துக்கொண்டதினால் வீட்டைவிட்டுப் புறப்பட்டு அந்த ஊருக்கு வரும்போது அது ஒரு குப்பைக் காடாக இருந்தது. சுட்டுப் போட்டாலும் அங்கே ஒருவனுக்காவது எழுத்துவாசனை என்பது தெரியாது. கள் குடிக்காதவன் அவ்வூரில் இல்லை என்றே சொல்லலாம். ஆடுகளையும் கோழிகளையும் காளிக்குப் பலியிட்டு கூத்தாடிக் கொண்டிருந்த காட்சிகள் அப்பொழுது நம் ராமுவைத் திடுக்கிடச் செய்தன.

இப்பொழுது கடம்பத்தூருக்கு சுற்று வட்டத்தில் பத்து மைல் தூரம்வரை ஒரு கள்ளுக்கடையைக்கூட பார்க்க முடியாது. ஊருக்கு வெளியில் எல்லோருக்கும் பொதுவான ஒரு சாவடி. அதில் பலவித தினசரி, வாரப் பத்திரிகைகள் எல்லோரும் படிப்பதற் கென்று வரவழைக்கப் பட்டன. சிறு பையனும், தினம் தவறுமல் பத்திரிகை படிப்பது என்னும் வழக்கம் அவ்வூராரை கெட்டியாக பிடித்துக் கொண்டது.

மாலையில் ரேடியோ கேட்பது, காலையில் அவரவர்கள் பண்ணைத் தொழிலைக் கவனிப்பது. மத்தியானம் ஒழிவு நேரங்களில், எல்லோரும் சாவடிக்கு வந்து ஏதாவது தெரிந்த கைத்தொழிலைச் செய்வது. அங்கே சுமார் முன்னூறு கைராட்டினங்களும், பத்து கைத்தறிகளும் சதா வேலை செய்துகொண்டிருக்கும். அந்த ஊரிலேயே விளைந்த பருத்தியையே அவர்கள் நெய்வது வழக்கம். அவ்வூரிலுள்ள குடிகள் தங்கள் உடைகளை அயலிலிருந்து வாங்குவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டார்கள். கடம்பத்தூர் சுகம் நிரம்பிய ஒரு பெரிய பட்டணம் போல் விளங்கியது.

இவ்வளவு காரியங்களுக்கும் நம் ராமுவே காரணம். அன்று தீர்மானம் செய்தபடி தன்னுடைய சொந்த ஊருக்கு வந்து கிராமப் புனருத்தாரண வேலையை மேற்கொண்டு ஐந்து வருஷங்களில் கடம்பத்தூரை இவ்வளவு உன்னத நிலைக்கு கொண்டுவந்தான் ராமு. முன் அவன் அண்ணன் ஏளனமாகச் சொன்ன வார்த்தைகள் அவனுக்கு இப்பொழுது கீதோபதேசமாகவே தோன்றியது.

* * *

மாலை மணி ஐந்து. மஞ்சள் வெயில் கடம்பத்தூர் சாவடியின் ஜன்னல்களின் வழியே உள்ளே நுழைந்து, உல்லாசமாகத் தங்கள் கைராட்டினங்களைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்த ராமுவின் மேலும் அவன் காதலி ராதையின்மேலும் விழுந்து கொண்டிருந்து. அவர்கள் இருவரும் யார் முதலில் அதிகம் நூல் நூற்கிறார்கள் என்று பந்தயம் போட்டு நூல் நூற்றுக்கொண் டிருந்தார்கள். பந்தயத்தில் ராமுவே தோற்றுவிடுவான் போலிருந்தது. இருவரும் ராட்டினங்களை வேகமாகச் சுற்றி நூலை இழுத்துக் கொண்டிருந்தனர்.

ராமுவின் கிராமப் புனருத்தாரணத்தைப் பார்வையிட்டு ஆனந்திக்க அவனைப் போன்ற சட்டசபை அங்கத்தினர் சப்பத்குமாரரும் அவர் மனைவி இந்துலேகாவும் போட்டிப் போட்டு நூல் நூற்கும் காதலர்கள் இருவர் முன் வந்து நின்றார்கள். ராமு திரும்பிப் பார்த்தான். அவர்கள் யார்? சாக்ஷாத் கடற் கரையில் ஐந்து வருஷங்களுக்குமுன், ராமு அன்று பார்த்தவர்கள் தான்!

மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டி

[ஜி. பாலசுப்ரமண்யம், மாயவரம்]

[சில அசந்தர்ப்பங்களால் சென்ற சில வாரங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட இத் தொடர் கதை இந்த வாரம் முதல் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு இன்னும் மூன்று வாரங்களில் முடிவு பெறும். ஆசிரியர்.]

பாங்க் மானேஜர் : இந்த சம்பந்தமாய் எங்களுக்குக் கிடைக்கக் கூடியது மிகவும் சொல்ப தொகைதான். உங்களுக்குச் சரக்கு அனுப்பிய ஆசாமி அவ்வூர் பாங்கிலேயே இது சம்பந்தமாயுள்ள பில்லை "டிஸ்கௌண்ட்" செய்து விட்டான். நாங்கள் தங்களிடம் வாங்கும் இரண்டணு கமிஷனில் ஒரு அணு அவ்விடத்திய பாங்குக்குச் சேருகிறது. பாக்கி எங்களுக்குக் கிடைப்பது நூற்றுக்கு ஒரு அணுதான். இதில் தபால் செலவு வேறு எங்களுக்கு ஆய்விடுகிறது. இங்கிருந்து தங்களிடம் ரூ 2000 வசூல் செய்து நாங்கள் பர்ஹாம்பூரிலுள்ள பாங்குக்கு அனுப்ப எங்களுக்கு ரூ $1\frac{1}{4}$ கமிஷன் கிடைக்கிறது. இது சம்பந்தமாய் நாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்துக்கு இந்த கமிஷன் அதிகம் என்று தங்களுக்குத் தோன்றுகிறதா? தாங்கள் ஓர் கம்பெனியாக அமைத்து விரிவான வியாபாரம் செய்ய ஆரம்பித்திருப்பதால் தங்களுக்குக் குறைந்த கமிஷன் போடும்படி சொன்னேன். வேறு தனிவியாபாரியாயிருந்தால் நான் நூற்றுக்குக் கால் ரூபாய் வீதம் இந்த உண்டியலுக்கு வாங்கி விடுவேன். இதை செட்டியாரிடம் போய் சொல்லுங்கள். நானும் கம்பெனி திறப்புவிழாவன்று அவரைப் பார்த்தது தான். இன்று சாயந்திரம் வந்து பார்க்கிறேன்.

ராமுடு, பாங்க் மானேஜர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு நேரிட செட்டியாரிடம் வந்து அவர் சொன்னவைகளைத் தெரிவித்தான். செட்டியார் தான் பாதிநோட்டாய் வழக்கம்போல் அனுப்புவதனுல் நல்லமிச்சம் இருக்கிறதே என்று மாத்திரம் நினைத்தாரேயொழிய பாங்க் மானேஜர் சொல்லியனுப்பியதில் திருப்தியடைந்தவராயில்லை. "நல்லது சாயந்திரம் மானேஜர் தான்நேரில் வருவதாகச் சொன்னுயே. அவரிடம் மறுபடியும் கலந்து கொண்டு நாளை செக் எழுதி பாங்குக்கு அனுப்பி ரயில்வே ரசீதைப் பெற்றுவரலாம் என்று சொல்லிவிட்டார்.

அன்று சாயந்திரம் 6 மணி சுமாருக்கு பாங்க் மானேஜர் செட்டியாரைப் பார்க்க வந்தார்.

பாங்க் மானேஜர் : என்ன, செட்டியார்வாள் தொழில் தீவிரமாக நடக்க ஆரம்பித்தாய்விட்டது என்று தெரிந்துகொண்டேன். எனக்கு இது மிகவும் சந்தோஷத்தை உண்டாக்குகிறது. தாங்கள் ஆரம்பிக்கும் வியாபாரம் எப்போதும் நன்முக நடத்தப்படும் என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதிலும் இம்மாதிரி கம்பெனியாக ஸ்தாபித்து நவீன வியாபார முறையில் அதைத் தாங்கள் நடந்த முன் வந்திருக்கிறதானது மிகவும் பாராட்டத்தக்கது. இக்கம்பெனியிலுள்ள முதலைவிட அதிகமான முதலைப்போட்டு வியாபாரம் செய்துவருகிற தனிவியாபாரிகளுக்கு இக்கம்பெனிக்கு இருக்கும் கௌரவம் இராது. வியாபாரத்துறையில் இக்கம்பெனி இதர ஊர் வியாபாரிகளால் அடையும் சௌகர்யங்கள் தனித்த வியாபாரிகளுக்குக் கிடைக்காது. ஆனதுபற்றி தாங்கள் கம்பெனி மூலமாய் செய்யும் வியாபாரம் ஏராளமான லாபத்தைத்தரும் என்பதில் சந்தேகமில்லை.

மாணிக்கம் செட்டியார் : ஆமாம்; கம்பெனி என்று பெயர் வைத்துக்கொண்டு தங்களுக்கு ஒவ்வொரு வியாபாரத்திலும் கமிஷன், வட்டி இவைகள் கொடுத்து அதிகச்செலவு செய்வது தான் நவீன வியாபார முறையின் கௌரவம். இதைத் தவிர எனக்கு வேறொன்றும் தெரியவில்லை. இரண்டாயிரம் ரூபாய் வியாபாரத்துக்குத் தங்களுக்கு ரூ. $2\frac{1}{2}$ கமிஷன் கொடுத்துவிட வேணும். முக்கால் வட்டி வேறு கொடுக்கவேண்டியிருக்கிறது. நான் பத்தணு செலவில் இரண்டு பாதியாய் நோட்டை அனுப்பிவிடுவேன். இதற்கு ரூ. $2\frac{1}{2}$

செலவிடச் சொல்கிறீர்கள். பணம் செல விட்டால் தானே. அய்யா கௌரவம் இந்த நாளில், எனக்கு அந்த கௌரவம் ஒன்றும் வேண்டாம் என்று கொட்டையூரிலேயே இருந்துகொண்டு வியாபாரம் செய்துகொண் டிருந்தேன். பையனை இங்கிலீஷ் படிப்புக்கு அனுப்பியதற்குப் பலன் இங்கு வந்து என் னென்னமோ செய்யச் சொல்லுகிறான்."

பாங்க் மானேஜர்: செட்டியார்வாள்! தாங்கள் சொல்வது சரியல்ல. பாதி நோட்டு அனுப்புவதில் இருக்கும் கெடுதல் தங்களுக் குத் தெரியவில்லை. சமீபத்தில் ஒருவர், ரூ. 20,000க்குப் பாதி நோட்டுகளாக அனுப்பி, அதில் ஒரு பாதி அனுப்பிய விலா சத்தாருக்குச் சேராமல் தபாலாபீசிலேயே களவு போய்விட்டது. ஒரு பாதி நோட்டு கள் அடங்கிய கவர்மட்டில்தான் அவருக்குப் போய்ச் சேர்ந்தது. முதல் நாள் ஒரு பாதி யும் மறுநாள் மற்றொரு பாதியும் அவர் அனுப்பினர். ஒவ்வொரு பாதியையும் ரூ. 100க்குத் தான் இன்ஷூர் செய்திருந் தார். ஆகையால் கெட்டுப்போன பாதி நோட்டுக்காக ரூ. 100 மாத்திரம் போஸ் டாபீசில் கிடைத்தது. பாக்கி 9900ம் அவர் இழக்கும்படி நேர்ந்தது. ஜாக்கிரதை யாய்ப் போய்ச் சேர்ந்த பாதி நோட்டுக்கு, வெகு தினங்கள் சென்று அநேகம் விதமான விசாரணை செய்த பிறகு பாதித்தொகை, அதாவது ரூ. 10,000 சர்க்காரிடமிருந்து கிடைத்தது. ஒரு பாதி நோட்டுக் கட்டைக் காண்பித்து முழுத் தொகையையும் வாங்கிக் கொள்ளலாமென்று இந்த நோட்டை அனுப் பியவர் வாதாடினதற்கு சர்க்கார் உத்தரவு ஒன்றைக் காண்பித்து அதன்படி பாதி நோட் டுக்குப் பாதித் தொகைதான் கிடைக்கு மென்று சொல்லிவிட்டார்கள். இது தங்க ளுக்குத் தெரியாதுபோலிருக்கிறது.

மாணிக்கம் செட்டியார்: அதென்ன ஒரு பாதி நோட்டைக் கொண்டு முழு நோட்டு களும் நம்முடையதுதான் என்று ருஜூ ஏற் பட்டால் முழுத் தொகையும் நமக்குக் கிடைக் காதா? இதென்ன சட்டம் மிகவும் நியாய விரோதமாயிருக்கிறதே!

பாங்க் மானேஜர்: தாங்கள் பாதி நோட் டாய் அனுப்புவதானது சர்க்காரை ஏமாற்று வதை உத்தேசித்துத்தானே. முழு நோட் அனுப்பி முழுத் தொகைக்கும் இன்ஷூர் செய்யவேண்டுமானால் தங்களுக்குக் குறைந்த பக்ஷம் மூன்று ரூபாய் செலவழியும். நியாய மாய் சர்க்காரால் ஏற்பட்ட கமிஷன் அது அவர்களுக்கு அவ்விதம் நியாயமாய்க் கிடைக் கக்கூடிய கமிஷனைத் தாங்கள் கொடுக்காமல், பாதி நோட்டாக அனுப்பினால் அவர்கள் தங் களுக்கு மேற்கூறியவாறு ஏராளமான நஷ் டத்தை உண்டாக்கும்படி விதி ஏற்படுத்தி விட்டார்கள். "காணிக் கூலி கோடிக் கேடு" என்று சொல்லியிருப்பதை தாங்கள் கேட்டிருக்கலாம். காணிக் கூலி கொடுப்ப தற்குப் பின் வாங்கிப் பிறகு ஏராளமான செலவு செய்யும்படியாகிறது. ஆகையால் தான் கம்பெனிகளில் நேர் வழியில் செல வாகும் தொகைகள் விஷயமாய் பின் வாங்க மாட்டார்கள். தாங்கள் சில்லரை நோட்டை முழு நோட்டாக மாற்றிக்கொள்வதற்குக் கொட்டையூரிலிருந்து கும்பகோணத்திற்குத் தங்கள் வேலையாட்களை யனுப்பிக்கொண் டிருந்தது எனக்குத் தெரியும். ஒவ்வொரு சமயமும் நானே தங்களுடைய ஆள் என்று தெரிந்துகொண்டு முழு நோட்டு கொடுத் திருக்கிறேன். பாங்க் உண்டியில் வாங்கி யனுப்பலாமென்றும் தங்களிடம் சொல்லச் சொல்லித் தங்கள் ஆள் மூலமே சொல்லி யனுப்பியிருக்கிறேன். தாங்கள் அதைச் செவி கொடுத்துக்கூட கேட்டதில்லை. கும்ப கோணத்திற்கு அனுப்பும் ஆள் பணத்தைக் கெட்டுப் போக்கிவிட்டானேயானால் அவ னிடம் எவ்விதம் தாங்கள் பணத்தை வசூல் செய்யக்கூடும்? எல்லாம் ஒழுங்காய் நடக்கும் வரையில் சரி. பிசகு ஏற்பட்டுவிட்டால் நமக்கு வரும் நஷ்டம் மிகவும் அதிகமாய் விடும். ஆகையால் மனுஷ்ய யத்தனத்தில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக விருக்கி ரோமோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கு நல் லது. இதை தாங்கள் தீவிரமாய் யோஜித் தால் நான் சொல்வதை ஒப்புக்கொள்வீர்கள். பாங்கிக்குக் கொடுக்கும் கமிஷனும் அதிகம் என்று சொல்லமாட்டீர்கள்.

மாணிக்கம் செட்டியார்: நான் இது வரையில் எவ்வளவோ தொகை அனுப்பி யிருக்கிறேன். எனக்கு ஒன்றும் நஷ்டம் வந்ததில்லை. ஏதோ நீங்கள் இப்போது எனக்கு ஓர் பீதியை உண்டாக்கி நான் இனி முன்போல் பாதி நோட்டை அனுப்பவிடாத வண்ணம் செய்துவிட்டீர்கள். அப்படித் தாங் கள் செய்யாவிட்டால் தாங்கள் எப்படி கமி ஷன் அடைவது?

பாங்க் மானேஜர்: செட்டியார்வாள், திரும்பவும் நான் சொல்லுவது நியாயமாக

விருப்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லையே. இங்கிருந்து பர்ஹாம்பூருக்கு நாங்கள் பணம் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நாங்கள் செய்திருக்கிறோமே. அதைப் பற்றித் தாங்கள் யோஜிக்கவே இல்லையே. எங்களுக்கு பர்ஹாம்பூரில் கிளை ஆபீசு இல்லை. வேறொரு பாங்கர் மூலமாய் நாங்கள் தொகையை அனுப்பவேணும். அந்த பாங்கர்கள் தங்களுக்கு ஒன்றும் பிரயோஜனமில்லாமல் எங்களுக்கு ஒரு காரியம் செய்வார்களா? இவைகளைப் பற்றித் தாங்கள் கொஞ்சம் யோஜித்தால் எங்கள் பேரில் குற்றம் சொல்லவேமாட்டீர்கள்.

மாணிக்கம் செட்டியார்: எல்லாம் எனக்குத் தெரிகிறது. ஏதோ கமிஷன் குறைப்பீர்களா வென்றுதான் பார்த்தேன். தாங்கள் மிச்சமில்லாமல் எங்களுக்கு ஒரு காரியம் செய்து கொடுக்கும்படி நான் கேட்பது உசிதமல்ல. இருந்தாலும் மனுஷ்ய சுபாவம் பேரம் செய்வது; நாளை தினம் செக் எழுதியனுப்பிவிடுகிறேன் பாசை அனுப்புங்கள்.

பாங்க் மானேஜர்: நல்லது; தாங்கள் கம்பெனியில் எங்கள் உதவியினால் எவ்வளவு சௌகரியங்கள் நடக்கிறதென்று போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள். இன்று தங்கள் பேரில் மூன்று நான்கு கணக்குகள் திறக்கப்பட்டிருந்ததை நான் கவனித்தவுடன் தாங்கள் பாங்க் சௌகரியங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டீர்களென்று உறுதிப்படுத்திக் கொண்டேன். என்னால் தங்களுக்கு என்ன ஆகவேண்டுமானாலும் நான் எங்கள் எல்லைக்கு மீறாமல் எதுவும் செய்துகொடுக்கத் தயாராகயிருக்கிறேன். நான் போய் வருகிறேன்.

மாணிக்கம் செட்டியார் பாங்க் மானேஜர் விடைபெற்றுச் சென்றதும் ராமுடுவைப் பார்த்து "என்ன ராமுடு, உன் மாமா தான் பாங்க் மானேஜரை இங்கு வரச்சொன்னாரா? அல்லது மானேஜர் தானாகவே வந்தாரா?" என்று கேட்டார்.

ராமுடு: மாமா அவரை வரச் சொல்லவில்லை. நான் பாங்கிக்குப் போகவேண்டுமென்று சொன்னேன். அதற்கு மாமா என்னை வண்டியில் ஏற்றிக்கொண்டு பாங்கில் என்னை விட்டுவிட்டு மானேஜரிடம் என்னைப் பற்றிச் சொல்லிவிட்டு கோர்ட்டுக்குப் போய் விட்டார். மானேஜர் என்னிடம் கமிஷன் விஷயமாய் கொஞ்சம் சொல்லிவிட்டுப் பிறகு தானே உங்களைப் பார்க்க வருவதாகச் சொல்லி யனுப்பினார்.

மாணிக்கம் செட்டியார்: உன் மாமா அந்த பாங்கில் ஒரு டைரக்டரல்லவா. அதன் பொருட்டுதான் மானேஜர் இங்கு வந்தார்.

ராமுடு: அதற்காக மாத்திரம் இல்லை. செட்டியார்வாள், தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமானால் உங்களைப் போன்ற பெரிய வியாபாரிகளைப் பார்க்க வேண்டியது முறைதானே. ஊரில் எவ்வளவோ பாங்குகள் இருக்கின்றன. இந்தபாங்கில்தான் நாம் வரவுசெலவு வைத்துக்கொள்ள வேணுமா என்ன. அவர் நேரில் தங்களைப் பார்த்தால் உங்களுக்கு அபிமானமிருக்கும்.

மாணிக்கம் செட்டியார்: நீயும் விஷயங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறாய். நீ சொல்வது சரிதான். மரியாதையை உத்தேசித்துத்தான் பாங்க் மானேஜர் இங்கு நேரில் வந்துவிட்டுப் போயிருக்கிறார். அதுவும் வியாபாரம்தானே அவர் பார்க்கவேண்டியது முறைதான்.

அன்று கம்பெனி ஆபீஸ் வேலை முடிந்தது. இவர்கள் ஊருக்குப் போய்விட்டார்கள். போய்க் கொண்டிருக்கும்போது, வேறு இன்ன இன்ன வியாபாரங்கள் சௌகரியமாய்ச் செய்யலாம் என்றும், தங்கள் கம்பெனி ஸ்தாபித்து வேலை செய்துகொண்டு வரும் விஷயத்தை தினசரிப் பேபரில் பிரசுரம்செய்வது உசிதமாயிருக்குமென்றும், மறுதினம் ஆபீசுக்கு வந்த உடன் தினசரி பேபர்களுக்கு கடிதம் எழுதவேண்டுமென்றும் தீர்மானம் செய்து கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

ராமுடு தன் தகப்பனாரிடம் அன்று தன் மாமனார் வீட்டில் இருக்கும்போது அவர் தன்னைக் கேட்ட விஷயங்களைப் பற்றியும், கம்பெனியில் நடந்த விஷயங்களைப் பற்றியும் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் தாயாரும் அருகில் நின்று கவனமாய் ராமுடு சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் பேசி முடித்த பிறகு அவன் தாயார், அவனைப் பின் வருமாறு கேட்டாள்:

"ஏன் ராமுடு! செட்டியார் பல கணக்குகள் இன்று பாங்கில் திறந்திருக்கிறதாகச் சொன்னாயே, உன் அப்பாவிடமும் நம் சொந்தப் பணத்தைக் கொண்டு ஓர் கணக்குத் திறந்து கொள்ளும்படி சொல்லேன்."

ராமுடு: அப்பாவுக்கு எது உசிதமோ அப்படிச் செய்கிறார். நான் எதற்காக அப்பாவிடம் அதைப்பற்றிச் சொல்லவேணும்.

(505-ம் பக்கம் பார்க்க)

நெற்றி வியர்வை

[ஆர். ரங்கநாயகி, மைலாப்பூர்]

உடலின் அழுக்கைத் தண்ணீரினல் கழுவுகிறோம். துணிகளின் அழுக்கானது சவுக்காரத்தினல் போகிறது. பாத்திரங்களின் அழுக்கோ புளி சாம்பல் முதலியவற்ருல் போகின்றன. ஆனல், நம்முடைய சமூகத்தில் பற்றியுள்ள தோஷத்தையும் தேசத்தைத் தீண்டிய பாவத்தையும் எந்தப் பதார்த்தம் கழுவ வல்லது? வாயால் வேண்டிக்கொண்டாலும், வெறுமனே மன்னிப்பு கேட்டுக் கொண்டாலும் அந்தக் கறை போகாது. நதிகளிலும், சமுத்திரத்திலும் ஸ்நானம் செய்தாலும் போகாது. அந்தக் கரணத்திலிருந்து உண்டாகும் உணர்ச்சி உண்டானல்தான் அது சுத்தமாகும். தேசத்தின் பாவத்தையும் சமூகத்தின் பாவத்தையும் கழுவுவதற்குச் சாதாரண ஜலம் போதாது. நம்முடைய உடலின் இரத்தமும் நெற்றியின் வியர்வையும் தான் அவற்றைக் கழுவக் கூடும். இந்தக் காரணத்தினலே உலகில் இருக்கும் ஒவ்வொரு மதமும் மனிதனுடைய இரத்தம் சிந்தின பிறகுதான் ஸ்தாபிக்கப் பெற்றது. இதுதான் ஈசுவரனுடைய கட்டளை. இரத்தத்தைக் கொடுத்தால்தான் பாவம் போகும்; இருதயம் சுத்தமாகும். இரத்தத்தினலேயே முகமதிய தர்மம் ஸ்தாபிக்கப்பட்டது. ஐரோப்பா என்னும் இறுகலான பூமியானது இரத்தத்தினலே நெகிழ்ந்த பிறகுதான் கிருஸ்தவ தர்மம் அதிலே வேர் ஊன்றமுடிந்தது. இரத்தத்தினலேயே சீக்கியர் தர்மம் நன்ருக விளங்கிற்று. சத்தியாக்ரகம் கூட இரத்தத்தைக் கொடுத்தால்தான் உலகில் மதிக்கப்படுமென்பது ஈசுவரனின் விருப்பமாக இருக்கலாம்.

இரத்தத்துக்கும் வியர்வைக்கும் வித்தியாசம் இல்லை. பாலும், நெய்யும், இரத்தமும், மாமிசத்திலிருந்து உண்டாகும் சாருக எப்படி இருக்கின்றனவோ, அப்படியே வியர்வையும் மனிதனின் இரத்தத்தினின்று உண்டாகிய திரவியமாகும். ஒருவனை பலவந்தப்படுத்தி வேலை வாங்குவதும் அவன் வியர்வையைப் பெருகச் செய்வதும், அவனை வதை செய்வதற்குச் சமானம்.

ஆனல், முதலாவது மிகவும் நஷ்டமானது, படிப்படியாகத்தான் அது தன் குணத்தைக்காட்டும். இதுதான் இரண்டிற்குமுள்ள வித்தியாசம். சில வருஷங்களுக்குமுன் நடந்த குருகாப்பாக் சத்யாக்ரஹத்தில், சர்க்கார், சீக்கிய வீரர்களைத் தடியால் அடித்து அவர்கள் இரத்தத்தைப் பெருக்கினர்கள். இந்தியாவில் இருக்கும் படைவீரர்களைப் போஷிப்பதற்காக ஏழை இந்தியர்கள் பிழியப்படுகிருர்கள். சர்க்காரின் இந்த இரண்டு காரியங்களும், தத்துவத்தில் ஒன்றே.

ஆப்பிரிக்காவிலுள்ள சில காட்டுமனிதர்கள் ஒருவரை யொருவர் சாப்பிடுகிருர்கள். செல்வம் படைத்த சீமான்கள் தங்களுடைய வேலையாட்களுடைய தேக உழைப்பினல் சௌக்கியம் அடைகிருர்கள். முற்கூறியதைப் போலவே இவ்விரண்டு செயல்களும் தத்துவத்தில் ஒன்றே.

ஒரு தேசத்தின் மேல் படையெடுத்து அதிலுள்ள லக்ஷக்கணக்கான ஜனங்களைக் கொல்வதைப் போலவே, ஒரு தேசத்தின் ஜனங்களை அடிமையாக்கி அங்கே லக்ஷக்கணக்கான ஆட்களைப் பலவந்தப் படுத்திக் கூலிகளாக்குவதும் கூட மனித வதையே யாகும்.

இன்னெருவனுடைய இரத்தத்தைப் பெருக்குவதக்குச் சமானமான மகா பாவம் வேறென்றுமில்லை. இதற்கு நேர்மாருக, முழுமனதுடனும், அறிவுடனும் ஒருவன் தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி பலிகொடுப்பதைப் போன்ற பிராயச்சித்தம் வேறென்றுமில்லை. ஒருவருடைய இரத்தத்தைச் சிந்தாமல் அவருடைய வியர்வையைச் சிந்தச் செய்வதும் கொலை

யாவதுபோல், தன்னுடைய இரத்தத்தைச் சொரிந்து பலிதானம் செய்வதற்குப் பதிலாக, தன்னுடைய வியர்வையைச் சொரிவதும் மிகவும் உயர்ந்த பிராயச்சித்தமாகும். பாவி மனிதன் ஒருவன், எப்பொழுது நினைத்தாலும் அப்பொழுதே இன்னொருவனைக் கொலை செய்து அவனுடைய இரத்தத்தைச் சிந்தக்கூடும். ஆனால் இன்னொருவனுடைய வியர்வை சிந்த வேண்டுமானால் அவனுடைய ஒத்துழைப்பினால்தான் சிந்த முடியும். பிராயச்சித்தமாக நாம் நம்முடைய இரத்தத்தைக் கொடுப்பதற்கு நாம் தயாராக இருந்தபோதிலும் கொலையாளி இன்னொருவன் நமக்குச் சகாயம் செய்தாலன்றி நம்மால் இரத்தத்தைக் கொடுக்க முடியாது. பஞ்சாப் சர்க்காரின் சகாயமில்லாதிருந்தால் வீரர் அகாலியர்களுக்கு தங்கள் இரத்தத்தைத் தர்மத்தின் பொருட்டு அர்ப்பணம் செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. ஆனால், நாம் நம்முடைய வியர்வையை நம் இஷ்டப்பிரகாரம் எப்பொழுது வேண்டுமானாலும் பலியாகக் கொடுக்கலாம். இதற்குக் கொலையாளியின் உதவி வேண்டியதில்லை. நம் மேல் கொஞ்சங்கூட தயை தாட்சண்ணியமில்லாமல், உழைத்து வேலை செய்து, நம்முடைய நெற்றி வியர்வை நிலத்தில் பெருக விடுவதுதான் சுதந்திர தேவியின் பொருட்டு நாம் கொடுக்கும் சிறந்த பலியாகும். இதுதான் தேசீயப் பிராயச்சித்தம் என்பது. இதனால் ஆத்மா சுத்தியடைகிறது. இது நிர்மாண காரியதிட்டமென்று சொல்லப்படுகிறது. நிர்மாண காரியத்திட்டத்தின் வீரத்தன்மை வெளியில் தெரிகிறதில்லை. அதனால் இதன் மகிமை குறைந்து போகாது. ஸ்வராஜ்யம் வேண்டுகிறவன் எப்பொழுதும் தன் இரத்தத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். அவனுக்கு அந்த நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் வரையில் நிர்மாண காரியத் திட்டத்தில் தன் வியர்வையை பெருக்கிக் கொண்டேயிருக்க வேண்டும்.

'நான் மற்றொருவனுடைய இரத்தத்தைச் சிந்துகிற பாவத்திலே ஒரு நாளும் போகமாட்டேன்; மற்றொருவனுடைய வியர்வையை அநியாயமாய்ப் பெருக்கி அதிலிருந்து அநுசிதமான லாபம் ஒன்றும் ஒருகாலும் அடையமாட்டேன்' என்ற தீர்மானத்தை ஸ்வராஜ்யம் வேண்டுகிற ஒவ்வொருவனும் எப்பொழுதும் தன்மனதில் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

(503-ம் பக்கத் தொடர்ச்சி)

செட்டியாரிடம் நான் பழகி வந்த வரையில் அவர் மிகவும் நாணயஸ்தர் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நம்முடைய பணத்துக்கு ஒன்றும் பயம் இல்லை. இருந்தாலும் நமக்கு பாங்கில் கணக்கு இருந்தால் பல காரியங்களுக்குச் சௌகரியமாயிருப்பதோடும் கூட மிகவும் கௌரவமாயும் இருக்கும். பார்த்துக்கொள்ளுவோமே. செட்டியாரும் தன் சொந்த வியாபாரத்தைக் குறுக்கிக்கொண்டு, கம்பெனி நடவடிக்கைகளில் தீவிரமாய்த் தன் புத்தியைச் செலுத்திக் கொண்டிருக்கிறார். நாம் கேட்காமலே அவர் பணத்தை நம்மிடம் கொடுத்தாலும் கொடுப்பார். நாம் கொஞ்சம் பொருத்துக்கொள்ளலாம்.

இதைக் கேட்டு அவன் தாயார் சமாதானமடைந்து உள்ளே சென்றுவிட்டாள்.

பேராசைக்காரன்

[பார்வதி சுப்ரமணியம், மங்களூர்]

ஒரே ஒரு பணக்காரனுக்கு மிகவும் செழிப்பான தோட்டம் ஒன்று இருந்தது. அத்தோட்டத்திலே பழுத்த பழங்கள் பெரியதாயும் இனிப்பாயும் ருசியாயும் இருக்கும். வேறே எந்த தோட்டத்திலும் அந்த மாதிரி காய்கள் பழங்களே கிடையாதாம். அத்தோட்டத்து ஓரத்திலே எல்லா வித மீன்களும் நிறைந்த ஒரு நதியும் ஓடிக்கொண்டிருந்தது. தோட்டத்தில் வளர்ந்த செடி வகைக்கும் பழ வகைக்கும் எண்ணிக்கை எடுப்பதே சிரமம். அவ்வளவு தினுசுகள் அத்தோட்டத்தில் வளர்ந்திருந்தன.

ஆனால் அந்தப்பக்கத்தில் வாழ்ந்த மனிதர்கள் இதை எல்லாம் கண்டு ஆச்சரியப் படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் இது மாதிரி செழுமையும் வளமையும் மனிதப் பிரயாசையினால் உண்டாவதில்லை, ஏதோ ஒரு பூதம்தான் இவனுக்கு உழைத்து இப்படிப் பலனைக் கொடுக்கிறது என்று நம்பியிருந்தார்கள்.

அந்தப் பணக்காரனுக்கு இந்த உலகில் ஒன்று கிடைக்க வேண்டும், என்ற குறையே இல்லை. எந்த பொருளும் அவனிடம் நிறைந்திருந்தது. ஆனால் சந்தோஷம் என்பது மட்டும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவனுக்கு எவ்வளவுதான் இருந்தாலும் இன்னும் மேலும் வேண்டும் என்ற பேராசைபித்து பிடித்திருந்தது.

ஒரு நாள் அவன் தோட்டத்தில் ஒரு பட்சியைக் கண்டான். அது அளவில் ஒரு கொட்டைப்பாக்களவு தானிருந்தது. மனிதரிடம் பழகியதுபோல் நடந்துகொண்டது. வானவில்லில் காணப்படும் அவ்வளவு நிறமும் அதன் இறகில் காணப்பட்டது. எல்லாவற்றையும்விட அதன் பாட்டுத்தான் ரொம்ப அதிசயமாய் இருந்ததாம்.

இந்தப் பட்சியைக் கண்ட பேராசை பிடித்த அந்தத் தோட்டக்காரனுக்கு ஒரு துராசை கிளம்பிற்று. "இந்த அதிசயமான பறவையைப் பிடித்து விட்டேனால் அதை வாங்க அனேகம் பேர் ஆசைப் படுவார்கள். இந்த விசித்திரப் பட்சிக்கு நான் என்ன விலை கேட்டாலும் மனிதர் கொடுக்கத் தயாராய் இருப்பார்கள். இதை விற்று நான் இன்னும் பெரிய பணக்காரன் ஆவேன்" என்று மனக்கோட்டை கட்டி ஒரு வலையைப் பரப்பினான். பட்சியும் அதில் அகப்பட்டுக்கொண்டது. தோட்டக்காரன் அதைப் பிடித்து அதனிடம் "நீ இதுவரை உன் இஷ்டம்போலப் பாடிக்கொண்டிருந்தாய். இனி மனிதர்கள் சந்தோஷப் படுவதற்காக

அவர்கள் இஷ்டப்படி நீ பாடவேண்டும்" என்று சொன்னன்.

அதற்கு பதிலாக, அவன் ஆச்சரியப்படும்படி, அந்தப் பட்சி அவனைப் பார்த்து "நான் உனக்கு இனிமையாகப் பாடினதற்கு இதுவா பதில் உபகாரம்?" என்று கேட்டது. மேலும் அது சொல்லிற்று: "நான் சுயேச்சையாக இருக்கும்போது தான் ஆனந்தமாய் பாடுவேன். கூட்டிலடைபட்ட நான் பாடவே மாட்டேனே."

அதற்கு தோட்டக்காரன் "நான் சொன்னபடி நீ கேட்காவிட்டால் உன்னைக் கொன்று தின்று விடுவேன்" என்று பதிலுரைத்தான். அதற்கு அந்த பட்சி "ஐயோ உன் பருத்த தொந்திக்கு கொட்டப்பாக்களவு என்னை தின்றதால் பசி அடங்கிப் போகுமா" என்று கண்ணீர் விட்டுக்கொண்டு கேட்டது.

தோட்டக்காரன் பட்சியைப் பார்த்து "ஓ அதிகப் பிரசங்கிப் பட்சியே! நீ எவ்வளவு பேசினலும் உன்னை விடுதலை செய்யப் போவதில்லை" என்று பயமுறுத்தினன்.

அப்போது அதைக் கேட்ட பட்சி "நீ என்னைமட்டும் விடுதலை செய்வாயானல், உலகில் இதுவரை யாரும் அறிந்திராததும், பெருத்த லாபத்தைக் கொடுக்கக் கூடியதுமான, மூன்று ரகசியத்தை உனக்குச் சொல்லுவேன்" என்று தந்திரமாகக் கூறிற்று.

லாபம் என்ற சொல் பேராசை பிடித்த தோட்டக்காரன் காதில் விழுந்ததும் "நீ உன் சொல் தவறுமல் எனக்கு அந்த ரகசியத்தைச் சொல்லுவாயானல் நான் உன்னை விடுதலை செய்துவிடுகிறேன்" என்ருன்.

பட்சியும் வாக்குத் தத்தம் செய்தது.

தோட்டக்காரன் கைபிடிப்பைத் தளர்த்தினன். குருவியும் வெடுக்கென்று பறந்து உச்சாணிக் கிளையில்போய் உட்கார்ந்து கொண்டது.

தோட்டக்காரன் குருவியிடமிருந்து அறியப்போகும் ரகசியங்களினல் பெரிய தனவந்தனகப் போவதற்குத் துடித்துக் கொண்டிருந்தான். குருவி சாவகாசமாக தன் கலைந்து நசுங்கின இறக்கைகளைக் கோதிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தது; "அட துஷ்டனே! நான் சொல்லப் போகும் ரகசியம் என்ன என்ருல், நீ கேள்விப்பட்டதை எல்லாம் நம்பிவிடாதே என்பதுதான்" என்று சொல்லிற்று.

அதுகேட்ட துஷ்டன் கோபமடைந்து வில்லை வளைத்து நாணேற்றி "ஏதோ ரகசியம் என்று ஏமாற்றினயே, இது ஒன்றும் புதிதானதில்லையே" என்று உறுமினன்.

அதற்குக்குருவி "இது உனக்குப் புதிதாயில்லாவிட்டால் அறிந்திருக்கிற இதை எப்போதும் மறந்துவிடாதே" என்று கூறிற்று.

அதுகேட்ட துஷ்டன் "நீ திரும்பவும் என் கையில் சிக்கிக்கொண்டாயானல் உன்னை எப்படிக் கசக்கி நசுக்குவேன் தெரியுமா?" என்ருன்.

குருவி அவன் சொல்வதை லட்சியம் செய்யாமலே "அடா இரண்டாவது இரகசியத்தை அறிந்துகொள். ஒருபோதும் நீ அடைந்திராத வஸ்துக்களைக் குறித்து ஏதோ நீ அவைகளை இழந்துவிட்டதாக வருத்தமடையாதே" என்று இரக்கைகளை அடித்துக் கொண்டு சொல்லிற்று.

அதற்கு தோட்டக்காரன் குருவியைப்பார்த்து "நீ வெறும் கதை அளக்கிறாய் என்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது" என்று கோபத்துடன் எரிந்து விழுந்தான்.

அதையும் குருவி லட்சியம் பண்ணமல் "ஏண்டாப்பா அந்த இரண்டு ரகசியத்தையும் நீ மறந்து போகாமல் இருக்க இன்னொருதரம் சொல்லட்டுமா" என்று கேட்டது.

அதற்கு துஷ்டன் கோபமடைந்து குருவியைப்பார்த்து "என்ன என்னை முட்டாளென்று நினைத்தாய்! உனக்குத் தெரிந்ததை விட எனக்கு நீ சொன்ன ரகசியங்களைப்பற்றி அதிகம் தெரியும். அந்த மூன்றாவது ரகசியத்தையாவது சொல்லித் தொலை" என்றான்.

உடனே குருவி "இது பரம ரகசியம். ரொம்ப கவனமாய்க் கேள். ஒருபோதும் உன் கையில் வைத்துக் கொண்டிருப்பதை காலுக்கடியில் எறிந்து விடாதே" என்றது.

ஏதோ புதையல் கிடைக்கும் என்று எண்ணியிருந்த தோட்டக்காரனுக்கு இவைகளைக் கேட்டதும் அதிக ஆங்காரம் கிளம்பி "ஐயோ இந்த தந்திரப் பறவையின் பேச்சில் ஏன் நம்பிக்கை வைத்தேன். இது சொன்னது ஒன்றும் எனக்குத் தெரியாததில்லையே" என்று வருந்தினன்.

அதற்குக் குருவி "ஏன் நான் சொன்ன மூன்றாவது ரகசியம் உனக்குத் தெரியாததுதான். தெரிந்திருந்தால் என்னை நீ விடுதலை செய்திருப்பாயா? என் உடம்பில் ஒரு ராத்தல் பிரமாணம் கொண்ட ஒரு ரத்னம் இருக்கிறதே, அது யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களுக்கு நினைத்ததெல்லாம் கிடைக்குமே" என்றதாம்.

இதைக் கேட்டதும் துஷ்டனுக்கு புத்தியே கலங்கிப் போய்விட்டது. கொஞ்ச நேரம் அவனை அப்படியே தவிக்கவிட்டுவிட்டு பிறகுகுருவி அவனிடம் "அட முட்டாளே! நீ இப்பொழுது ரத்னத்தை இழந்ததாகத் தானே வருந்துகிறாய். நீ என்னைக் கையில் வைத்துக் கொண்டிருந்த போது நான் கொட்டைப் பாக்கள வும் தோலாகனமும்கூட இல்லாமலிருந்ததை கவனிக்கவில்லையா" என்று கேலி செய்தது.

அவன் "ஆம் நான் கவனிக்கத் தான் இல்லை" என்றான் வெட்கத்துடன்.

உடனே குருவி "அட முட்டாளே! நான் சொன்ன மூன்று ரகசியங்களையும் அறிந்து நட. கேள்விப்படுபவை எல்லாவற்றையும் நம்பாதே என்கிற போதே நான் உன்னைக் கேலி செய்வதை அறிந்து கொள்ளாமல் நம்புகிறாய். நீ பெற்றிருந்த ரத்னத்தை இழந்து விட்டதாக வருந்துகிறாய். உன் கையில் கிடைத்த என்னை விட்டு விட்டாய். எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்று கேட்டுக்கொள். முட்டாள் தன்னை புத்திமானாய் நினைத்துக் கொண்டிருப்பதால் எந்த புத்திமதியும் அவன் மூளையில் ஏறாது" என்று சொல்லி விட்டுப் பறந்து போய் விட்டது.